Registerd as a News Paper பக்கங்கள் 10 விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 29 [11-06-93] வெள்ளிக்கிழமை ஓசை 113

### பயிலுனர் ஆசிரியரின் விபரம் கோரப்படுகிறது

தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி பயிலுனர் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டவர்களின் விபரங்களை கல்விச்சேவை ஆணைக்குழுவிற்கு உடனடியாக அனுப்பிவைக்குமாறு கல்விச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர்களையும் கேட்டுள்ளார். இவர்கள் பற்றிய விபரங்களை 25-3-93 வரை நியமனம்செய்யப்பட்டுள்ளவர்கள் பற்றியதாக இருக்கவேண்டும் என்றும் இதில் வேறுபதவிகளுக்குச் சென்றவர்களின் விபரமும், பயிலுனர் ஆசிரியர்க [10ஆம் பக்கம் பார்க்க]

## —பூநகரி பாதை திறப்பு விவகாரம்—

# ஐ. நா. தயாரித்த ஒப்பந்தம் விடுதலைப் புலிகள் பரிசீலனை

### பேச்சுவார்த்தை மீண்டும் தொடரும்

[யாழ்ப்பாணம்]

பூநகரிப் பாதையைத் திறப்பது சம்பந்தமான அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் தயாரித்த நகல் ஒப்பந்தம் ஒன்றை விடுதலைப் புலிகள் பரிசீலனை செய்து வருகின்றனர். இந்த ஒப்பந்தத்தில் அடங்கியுள்ள பல்வேறு அம்சங்கள் குறித்தும் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது விடுதலைப் புலிகளுக்கு அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயப் பிரதிநிதி விளக்கம் அளித்தார்.

நேற்றுப் பகல் 11.00 மணிக்கும், 1.00 மணிக்கும் இடையில் இடம் பெற்ற இச் சந்திப்பின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியற்துறைப்பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் ஆகியோரும்அகதிகளுக்கான ஐ நா உயர்ஸ்தானிக ராலய சார்பில் கொழும்பு வதிவிடப்பிரதி நிதி பீற்றர் நிக்கலசும் யாழ். வதிவிடப்பிரதிநிதி அசோக்குமாரும் கலந்துகொண்டனர்.

பூநகரி பாதை திறப்பது தொடர்பாக சிறிலங்கா இராணுவமும், புலிகளும் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் அடங்கிய நகல் ஒப்பந்தம் ஒன்றை விடுதலைப் புலிகளிடம் அகதிகளுக்கான ஐ. நா. அதிகாரி கையளித்தார். இதில் உள்ளடங்கிய விதிகள் சம்பந்தமாகவே நேற்று விரிவாக ஆராயப்பட்டது.

இதேவேளை, நேற்று கொழும்பு திரும்பிய அ. ஐ. நா. உயர்ஸ்தானிகராலய கொழும்பு வதிவிடப் பிரதிநிதி பீற்றர் நிக்கிலஸ் ஒரு வாரத்தில் மீண்டும் பூநகரிப் பாதை விவகாரம் குறித்து பேசுவதற்கு யாழ்ப்பாணம் வரவுள்ளதாகத் தெரியவருகின்றது.

### கொழும்பில் தமிழருக்கு விசேட சான்றிதழ் திட்டம்

கொழும்பில் தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து திடீர் என கைது செய்யப்படுவதை தடுக்க விஷேட சான்றிதழ் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் தமிழ் இளைஞர், யுவதிகள் தொடர்ந்து கைது செய்யப்படுவதை தடுப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பல திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாகவும் இதில் ஐந்து அம்சங்கள் அடங்கி இருப்பதாக பி. பி. ஸியில் தெரிவிக்கப்படுகிறது.

இதில் கலந்து கொண்ட பாதுகாப்பு படையினர் ஒரு முறை கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்படும் தமிழ் வாலிபர்கள் மீண்டும் கைது செய்யப்படுவதை தடுப்பதற்கு விஷேட சான்றிதழ் ஒன்றை (10 ஆம் பக்கம் பார்க்க)

### வீரச்சாவு



லெப். மிதுலன்
(வேண்மா)

01-05-93 அன்று திருமலையில் இடம்பெற்ற முகாம் தகர்ப்பொன்றில் விழுப்புண் அடைந்திருந்த விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் (10 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு காடுகளில் பாரிய ராணுவ நடவடிக்கை

### 3000 படையினர் குவிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பின் வடக்கு பகுதியில் முப்படைகளும் இணைந்து மீண்டும் நேற்று அதிகாலை முதல் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளதாக சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு வடக்கில் உள்ள வாகரை, மாங்கேணி, கயங்கேணி மற்றும் கதிரவெளிப்பகுதிகளில் நேற்று அதிகாலை 4.00 மணி முதல் காலவரையறையற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு சுமார் 3000ற்கு மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் பாரிய தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடல் சூறாவளி (முதுசுலாங்) எனப் பெயரிடப்பட்டுள்ள இவ் இராணுவ நடவடிக்கைக்கு விமானப்படை மற்றும் கடற்படையினரின் உதவிகளையும் இராணுவத்தினர் நாடியுள்ளதாகவும் கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இப் பகுதிகளில் 250 வரை (10 ஆம் பக்கம் பார்க்க)

### வெளிநாட்டு சமாதானக்குழு கிழக்கிற்கும் செல்லும்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு விஜயம் செய்த வெளிநாட்டு சமாதான நல்லெண்ணத் தூதுக் குழுவினர் கிழக்கு மாகாணத்துக்கும் விஜயம் செய்யஉள்ளதாகத் தெரியவருகிறது.

நேற்றுமாலை பருத்தித்துறையில் இருந்து புறப்பட்ட சமாதானக்குழு அனுராதபுரத்துக்குச் சென்று பின்னர் அங்கிருந்து மன்னார் தீவு, மடு ஆகிய பகுதிகளுக்குச் சென்று அங்கிருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகியபகுதிகளுக்கும் செல்ல உள்ளது.

பின்னர் அங்கிருந்து இரு குழுக்களாகப் பிரிந்து ஒரு குழு மட்டக்களப்பு, அம்பாறை (10 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் துணிகர அதிரடி 5 பொலிஸ் பலி; பலர் காயம்

(மன்னார்)

சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் அமைந்திருந்த பொலிஸ் காவலரண் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய துணிகர அதிரடித் தாக்குதலில் 5 பொலிசார் கொல்லப்பட்டதுடன் ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு 10.40 மணியளவில் தள்ளாடி இராணுவ முகாமுக்கும் மன்னார் தீவிற்கும் இடையில் கடல் பாதையில் அமைந்திருந்த பொலிஸ் காவலரண் மீதே விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

சுமார் 7 நிமிடங்கள் வரை நடைபெற்ற இத் துணிகரத் தாக்குதலின் போது 4 பொலிசார் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும் இரு பொலிசார் படுகாயமடைந்த நிலையில் அவசர சிகிச்சைக்காக எடுத்துச்செல்லப்பட்ட போது இடையில் ஒரு பொலிஸ் பலியானதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத் தாக்குதலின் போது புலிகள் தரப்பில் எதுவித சேதங்களும் ஏற்படவில்லை.

### கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(மன்னார்)

மன்னார்ப் பகுதி பொலிஸ் காவலரண்மீது விடுதலைப் புலிகள் நடத்திய வெற்றிகரத் தாக்குதலின்போது புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு;

- ★ ரி. 56-1 ரக துப்பாக்கி 03
- ★ இதன் ரவைக்கூடு 11
- ★ நடுத்தர ரவைகள் 1303
- ★ 5. 56 ரக ரவைகள் 164
- ★ எம்-4 ரக கைக்குண்டு 14
- ★ செயின் பெட்டி 04
- ★ 84-எவ் ரக ரவைக்கூடு 01
- ★ ஏ. கே. கோல்சர் 04
- ★ ஹெல்மெற் 01

### யுத்தக் கைதிகளை தூதுக்குழு சந்தித்தது

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டு நல்லெண்ணத் தூதுக் குழுவினர் நேற்றுக் காலை தமிழீழ விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலுள்ள 38 சிங்களப் பொலிஸாரையும், இராணுவச் சிப்பாய் ஒருவரையும் பார்வையிட்டனர்.

நேறுக் காலை 9.30 மணி முதல் 10.00 மணிவரை அரைமணி நேரம் இடம் பெற்ற இச் சந்திப்பில், போர்க் கைதிகளும் தூதுக் குழுவினரும் பரஸ்பரம் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

இச் சந்திப்பின் போது, போர்க் கைதிகள் அனைவரும் கையெழுத்திட்ட மகஜர் ஒன்றை நல்லெண்ணத் தூதுக் குழுவினரிடம் கையளித்தனர். தம்மை விடுவிக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்கத் தவறி (10 ஆம் பக்கம் பார்க்க)

### கிளாலி – பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## வரி விளம்பரம்

### இன்று சனி வக்கிரம் ஆரம்பம்

(நாளைசெவ்வாய் மாற்றம்) ஸ்ரீசத்தியசாயிபாபா அவதரிக்குப்போது ஆயுள்ஸ் தானத்தைப் புதன், வெள்ளி சூரியன், சனி வியாழன் நோக்கியதால் ৬6 வயது வரை பூரண ஆயுள் உண்டு ''சத்யா'' கட்டுடை. (5119)

### மாணவப் பேச்சாளர்களுக்கு

பெரியார்கள், பண்டிகைகள், பொழுதுபோக்கு, செல்லப் பிராணி போன்ற பல விடயங்களில் மாணவர்களுக்கான மேடைப் பேசசுக்கள், ''என்னாலும் பேச முடியும்'' ஆசிரியர்-'கோப்பாய்சிவம்., (5107)

### கோடை

மகாகவியின் கோடை நாடகம் வெளியீடுவிற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (சி-6739)

### கார்கசற் றேடியோக்களா? கடிகாரங்களா?

மேற்குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம் திருத்தக் கொடுத்து, பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரானலி வீதி, யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-6784)

### ஜோதிடம்

விவாகம் எப்போது? வெளிநாடு போகலாமா? என் பெயர் அதிர்ஷ்டமானதா? உங்கள் எதிர்காலம் பற்றி அறிய சோதிடர் வேலணை V A. சிவராசா, 152B அரசடி றோட் கந்தர்மடம், யாழ்ப்பாணம். (5122)

### விற்பனைக்குண்டு

3 மாத கறுப்பு நிற ஆண் அல்சேசன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி, N. விஜிதரன் 125, ஐயனார் கோவில் வீதி, வண்ணார் பண்ணை யாழ்ப்பாணம். (5124)

### 'பலோமீ' பரீட்சை

''பலோ மீ'' பரீட்சை இம்மாதம் எதிர்வரும் பத்தொன்பதாம் திகதி சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ். கல்வித்திணைக்கள வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் நேற்று முன்தினம் தபாலில் சேர்க்கபப்பட்டுள்ளதாக மேலும் தெரியவருகின்றது. (பா

### பயிற்சிநெறி

யாழ். மாவட்ட சிக்கன கடன் உதவு கூட்டுறவுச் சங்கச் சமாசத்தின் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிநெறி வகுபபு நடாத்தப்பட்டு வருகின்றது

இபபயிற்சிநெறி சமாசத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும் பிராந்திய உதவியாளர்களுக்கும் யாழ். கூட்டுறவுச்சபை மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ளது இது எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளி வரை நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது. (41)

## அரசியல்

கட்சிஉறுப்பினர்களைசந்தித்து பேச முயன்றபோது சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. கொழும்பு திரும்பியதும் அவர்களை சந்திப்போம். அஸ்கிரிய மல்வத்தை பீடாதிபதிகளை சந்திக்க முயற்சித்து வருகிறோம். கண்டியில் உள்ள செடக் பிரதிநிதிகள் இம்முயற்சியிலீடுபட்டுள்ளனர். இம் முயற்சி செயல் வடிவம் பெறும்போது இப்பீடாதிபதிகளை ஆலோசனை கலக்கவுள்ளோம் சகலதரப்பு யோசனைகளையும் நாம் இப்போது பெற்று வருகிறோம் வடக்கு-தெற்கு மக்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்த முயற்சிக்கின்றோம்.

கேள்வி:- பௌத்த பிக்கு என்ற வகையில் நீங்கள் அஸ்கிரிய மல்வத்தை பீடாதிபதிகளை சந்திக்க முயற்சித்தீர்களா?

குசலிசிற்றோ (தாய்லாந்து தேரர்) :- எனக்கு சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. கொழும்பிலும் புறநகர் பகுதியிலும் ஏனைய பீடாதிபதிகளையும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது ஏனைய தரப்பினரையும் சந்தித்தேன். எமது பணி கஷ்டமானது. மக்கள் மனதை மாற்றுவது சிரமமான காரியம். சிறிலங்காவிலும் எனது நாட்டிலும் [தாய்லாந்து] சமாதானம் ஏற்படுத்த எனது வாழ்வை அர்ப்பணித்துள்ளேன்.

கேள்வி:- பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை குறித்து நீங்கள் என்ன நடவடிக்கைளடுக்கவுள்ளீர்கள்?

அன்டன் செல்வநாயகம் (மலேசியா): இந்தக் கோணத்தில் நாம் சிந்தித்துள்ளோம். சமாதான முன்னேற்பாட்டில் இதுவும் முக்கியமானது. இது பற்றி கவனிக்கவுள்ளோம்.

கேள்வி: வடக்கு, கிழக்கில் நடைபெறுவது ஒருதேசிய விடுதலைப் போராட்டம். பேச்சுக்கான அடிப்படையில்லாது சமாதானம் பற்றிபேச முடியுமா?

அன்டன் செல்வநாயகம்: இங்குள்ளவர்களை நாம் சந்தித்து அவர்கள் கருத்தை நாம் அறிந்து கொள்கின்றோம். இதை பௌதிகரீதியான அவதானிப்பாக கருத முடியாது. இச் செயற்பாட்டில் பல விடயங்களை நாம் அவதானித்துள்ளோம்.

கேள்வி: உங்கள் மறைமாவட்டமான மின்ரோனாவில் முஸ்லிம்கள் போராடுவதன்நோக்கம் என்ன?

பியூப்பிளஸ்: (பிலிப்பைன்ஸ் ஆயர்) அங்குள்ள முஸ்லிம்கள் தமது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுகின்றனர் அவர்களுக்கும் அரசுக்குமிடையில் பேச்சுக்கள் நடைபெற்றுவருகின்றன

கரோலியன்ஸ் பிறிஸ்: (புரூணை) மணிலா, இந்தோனேசியா இன்னும் பல நாடுகளில் மின்டோனா போராளிகளுக்கும் அரசுக்குமிடையில் பேச்சுக்கள் நடைபெற்றுவருகிறது.

கேள்வி: விடுதலைப் புலிகளின் காவலிலுள்ள யுத்தக் கைதிகள் குறித்து என்ன நடவடிக்கைளடுக்கிறீர்கள்?

ஜோவில்லியம்: (செடக்) அவர்களைச் சந்தித்து அவர்களது விருப்பங்களைக் கேட்டறிந்துகொண்டோம். கொழும்பு திரும்பியதும் எமது குழு போர்க்கைதிகள் தொடர்பான பிரச்சினைக்கு உடனடிகவனம் செலுத்துவோம்.

கேள்வி: அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னான்டோ உங்கள்சர்வமதகுழுஅமைப்பில் அங்கத்துவம்பெறுகிறாரா?

ஜோவில்லியம்: அவரைக் கொழும்பில் சந்தித்தோம். கென்னத் இக்குழுவில் அங்கத்துவம்வகிக்காவிடினும் அவரது கிறிஸ்தவ தேசிய சபை பிரதிநிதிகள் எமது அமைப்பில் அங்கம் வகிக்கின்றனர்.

கேள்வி: நாட்டின் இரு முக்கிய அஸ்கிரிய, மல்வத்தை பீடாதிபதிகள் உங்கள் சர்வமத குழுவில் இருக்கின்றனரா?

ஜோவில்லியம்; அவர்களின் பிரதிநிதிகள் எமது சர்வமத குழுவில் இன்னும் இடம்பெறவில்லை அவர்கள் இணையக் கூடும். வேறு பௌத்த பிரதிநிதிகள்இப்போது அங்கம்வகிக்கின்றனர். காலப்போக்கில் விரிவான சர்வமத குழுவில் அஸ்கிரிய, மல்வத்தைப் பிரதிநிதிகள் இடம்பெறுவர்.

ௐ


பருத்தித்துறை பசுபதீஸ்வரர் தேவஸ்தான

## துவஜாரோகணம்

பருத்தித்துறை பசுபதீஸ்வரர் (சிவன்) தேவஸ்தான வருடாந்த உற்சவம் இன்று (11-06-93) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது,

மேற்படி ஆலய பிரதம குரு சிவஸ்ரீ தா. வாசுதேவ குருக்கள் தலைமையில் 16 தினங்கள் உற்சவம் நடைபெற்று 25-06-93இல் தேர்த்திருவிழாவும், 26-6-93இல் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (சி-6811)

## ஈரநெஞ்சுடன் ஓராண்டு வாழ்த்துக்கள் 11. 06. 1993



ஜோ தயாளன் இம்மனுவேல்

### வீரவேங்கை அரசப்பன்

கருவாகி உருவாகி ஏக புதல்வனாகி
தம்பியாகி அண்ணாவாகி தயாளனாகி
ஊர்ந்த மண்ணிற்கு விதையாகி
ஓராண்டு சென்றதையா - ஆனாலும்
ஓயாது ஒழியாது உன் நினைவு
காயாத கல்லறையில் துயில்கொள்ள
ஈரநெஞ்சுடன் என்றும்
எமது வாழ்த்துக்கள்.

- குடும்பத்தினர், உறவினர்.

சில்லாலை (சி/6809)

## நினைவு கூருகின்றோம் ... 1993-06-11

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை - புகையிரத நிலையத்தில் வைத்து சிறிலங்கா ஊர்க்காவற் படையினரால் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமற் போன 4 தமிழர்கள்.

மட்டு - கிரான்குளம் முகாமில் வைத்து இந்தியப் படையினரால் கொலை செய்யப்பட்ட குருமண் வெளியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1989ஆம் ஆண்டு தேசவிரோத சக்திகளினால் படுகொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

சுப்பையா நிக்கலஸ் (உக்கிளாய் - வவுனியா)

தேசவிரோத சக்திகளினால் படுகொலை செய்யப்பட்ட வவுனியா - உக்கிளாயைச் சேர்ந்த தமிழ்ப் பொது மகன்.

1990ஆம் ஆண்டு மட்டு - களுவாஞ்சிக்குடியில் சிறிலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

கபூர் (முகம்மது அலியார் முகம்மது சலீம் - காங்கேயன் ஓடை - மட்டு )

சபேசன்/வெசன் (சாமித்தம்பி துரைரத்தினம் - தம்பலவத்தை மண்டூர் - மட்டு)

நவயுகன் (தம்பாப்பிள்ளை திருச்செல்வம் - கொக்கட்டிச்சோலை - மட்டு. )

கீறோ (கொத்தியர்புலவு - மட்டு. )

வசந்தராஜ் [கோயில் போரதீவு - மட்டு ]

விமலநாதன் (பாக்கியராசா ரவி- மகிழவெட்டுவான்- மட்டு.)

மட்டு - கல்குடாப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

தாஹிர் (முகைதீன் பாவா அன்சார் - திருக்கோணமடு - பொலநறுவ)

மட்டு - கும்புறுமூலைப் பகுதியில் சிறிலங்கா இராவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

2-ம் லெப். மார்ஷல் (மார்க்கண்டு நமசிவாயம் - கிண்ணியடி வாழைச்சேனை- மட்டு)

2-ம் லெப். சதீபன் ( - பாக்கியராஜா- விளாவெட்வான் - மட்டு )

சகுந்தர் (சுப்பிரமணியம் பஞ்சலிங்கம் - கோரப்பல்லிமடு - மட்டு.)

பரசு (செல்வராசா - சந்திவெளி - மட்டு )

செந்தில் ( - கிண்ணியடி - மட்டு. )

ஹரி/கிரி (பூபாலபிள்ளை செல்வராஜா- மன்னம்பிட்டி - பொலநறுவ)

கலவரத்தின் போது திருமலை சென்று காணாமல் போன மட்டு - வாழைச்சேனையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு முல்லைத்தீவு - அரியகுண்டான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

2-ம் லெப். சூரி (காளிமுத்து காமராஜா - வற்றாப்பளை, முள்ளியவளை- முல்லைத்தீவு)

ரசீத் (சண்முகராசா பன்னீர்ச்செல்வம் மயில்வாகனபுரம், பிரமனந்தனாறு - விசுவமடு)

1992ஆம் ஆண்டு யாழ்-வலிகாமம் வடக்குப் பகுதியில் நான்கு முனைகளில் முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

கப்டன் வழுதி/மென்டிஸ்-மெல்மன் [விக்கிரமசிங்கம் வியோகானந்தராசா - அம்பாறை வீதி, அக்கரைப்பற்று - 07 - அம்பாறை

2-ம் லெப். இளையவன்/பாலன் [கனகசபை குணராசா - பாலமுனை, மண்டூர் -மட்டு]

அரசப்பன் [யோ தயாளன் இம்மனுவேல் - புனித மரியாள் வீதி. சில்லாலை- பண்டத்தரிப்பு]

மட்டு - சித்தாண்டியில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

2-ம் லெப். சர்வேஸ்வரன்/விஜி (ஆறுமுகம் சின்னத்துரை - மாவடிவேமபு - மட்டு. )

தேவகுரு/சாள்ஸ் [விஸ்வநாதன் சிவகுமார் - முறக்கொட்டாஞ்சேனை - மட்டு]

வலிகாமத்தில் பல பாகங்களிலும் தொடர்ச்சியான வான் தாக்குதலாலும், கடற்படை பீரங்கித்தாக்குதலாலும் முள்ளானையில் 3 பேரும், விளானில் 4 பேரும் மாதகலில் ஒரு சிறுவனும் இளவாலையில் ஒருவருமாக கொல்லப்பட்ட 09 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6808)

# சிதைந்து உருக்குலையும் பொசுனியாவும் செய்வதறியாது திகைத்து நிற்கும் உலகமும்

**பாலகுமாரன்**

பொசுனியாவின் இன்றைய நிலையை எண்ணிப் பார்ப்போர் எவராயினும் அவர் உடல் விறைத்துப் போகும். மூளையோ சிந்திக்கும் ஆற்றலை இழந்துவிடும். கடந்த இரு வருடங்களாக பொசுனியா' கேர்சகோவினா பற்றி பேசிப் பேசியே ஐ.நா., அமெரிக்கா, மேற்குலகம், இசுலாமிய உலகம், நேட்டோ, ஐரோப்பிய பொருளாதார சமூகம் தனித்தும் கூட்டாகவும் செய்தது என்னவென்பது எவருக்குமே விளங்கவில்லை. அதுவும் குறிப்பாக ஐ. நாவும் ஐரோப்பிய பொருளாதார சமூகமும் கூட்டாக முன் வைத்த அமைதித் திட்டத்தின் பின்னர் (பொசுனியாவை இனஅடிப்படையில் பத்து வலயங்களாகப் பிரித்தல்) பொசுனியாவே உருத் தெரியாமல் சீர் குலைக்கப்பட்டுள்ளது அழிவின் விபரங்கள் புள்ளி விபரங்களாக அண்மையில் வெளியிடப்பட்டன.

சேர்பியர் இதுவரை மேற்கொண்ட இனச் சுத்திகரிப்பின் விளைவு - இன்று 70 வீதமான பொசுனியப் பகுதி பொசுனிய சேர்பியர் கைகளில் உள்ளது போதாக் குறைக்கு பொசுனியக் குரோசியரும் முசுலிம்களை விரட்டி தமது பகுதிகளை 15 வீதம் அதிகரித்து விட்டனர். இற்றைவரை எல்லா தரப்பிலுமாக மொத்தம் ஓர் இலட்சத்து முப்பத்தேழாயிரம் பேருக்கு மேல் இறந்துவிட்டனர். அல்லது காணாமல் போய்விட்டனர். 15000 சிறார்கள் இறந்து போயினர்அல்லது காணாமல் போயுள்ளனர். 22 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பொசுனியாவிலே அகதிகள். இவர்களுள் பெரும்பாலோர் பொறியில் சிக்கிய நிலையில் உள்ளனர். 17 இலட் சத்திற்கு மேற்பட்டோர் ஐரோப்பாவெங்கும் அகதிகள். 35 ஆயிரத்திற்குமேற்பட்ட சிறார்கள் காயமுறறு தக்க மருத்துவ பராமரிப்பிற்கு வழியின்றி வாடுகின்றனர். இன்று உள்ளூர் தெருக்களிலே அனாதை முசுலிம் சிறுவர்கள் கையேந்திஉணவிற்காகஇரந்து திரிகின்றனர். ஐ நா. வாகண அணிகளின் பின்னால் உணவு தேடி ஓடுகின்றனர். பொசுனியாவில் உள்ள குரோசியருக்கும் சேர்பியருக்கும் குராசியா என்றும், சேர்பியா என்றும் (முன்னாள் யூகோசிலேவியாவின் மிஞ்சிய பகுதிகள்) அக்கம் பக்கததில் தாய்நாடுகள் உண்டு. ஆனால் முசுலிம்கள் எங்கு போவார்கள்? இன்று அவர்களின் தாயகமே அவர்களின் புதைகுழிகளாகி விட்டது. இப்போது அதற்கும், இடப்பற்றாக்குறை. இதனால் இப்போது ஒரு புதைகுழியில் இருவர் மூவர் என குழியிடப்படுகின்றனர்.

எனவே தலைக்கு மேல் வெள்ளம் போய் கொடுமைகள் ஒன்றின் மேல் ஒன்றாகக் குவிந்து மேற்குலகின் முன் பூதாகார வடிவம் எடுத்து நிற்கின்றது. மேற்குலகமோ கழிவிரககத்தால் தலை குனிந்து நிற்கின்றது. அமெரிக்காவோ தனது மேற்குலக தலைமைப் பதவியை தக்க வைத்துக் கொள்வதற்காக - தனது சொந்த முடிவாக விமானத் தாக்குதல் என்ற நிலைப்பாட்டை முன்வைத்தது. எனினும் அமெரிக்காவிற்கு பொசுனியா தொடர்பாக ஏதும் பாதுகாப்பு பிரச்சினையோ அல்லது தனது பொருளாதார நலன்கள் பாதிக்கப்படும் என்ற நிலையோ இல்லாததால் வெகு ஆறுதலாக அமெரிக்கா முடிவுகள் எடுக்கின்றது. அதே சமயம் ஐ நாவும் தன்பங்கிற்கு பொசுனிய முசுலிம்களுக்குபாதுகாப்பு வலயங்களை உருவாக்கி இராணுவப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்ற முடிவிற்கு வந்துள்ளது. ஆனால் இத்தகைய எத்தீர்மானங்கள் குறித்தும் கருத்து முரண்பாடுகள் காணப்படுவதோடு இவற்றினை நடைமுறைப் படுத்துவது குறித்து ஒருமனதான முடிவு ஏதும் எடுக்கப்படவேயில்லை. முதல் தடவையாக அமெரிக்காவின் போக்கு கடும் கண்டனத்திற்குள்ளாக்கப்படுவதோடு பில் கிளிண்டன் அனுபவமற்ற பள்ளி மாணவன் போல் நடப்பதாக வேறு கூறப்படுகின்றது. எனவே இப்போது அமெரிக்கா தனது புதிய உலக ஒழுங்கு பற்றிய பேச்சே எடுப்பதில்லை.

எவ்வாறாயினும் பொசுனியாவில் இன்று உலகம் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்தான சில தெரிவுகள் முன் வைக்கப்படுகின்றன. இவற்றில் ஒன்றையோஅல்லது பலதையோ செய்ய வேண்டும் என உலகம் நிர்ப்பந்திக்கப்படுகின்றது. முதலாவதாகபொசுனியாவில் உள்ள சேர்பியர் நிலைகள் மீது கடும் விமானத் தாக்குதல்கள், மேற்கொள்ளல், இரண்டாவது சேர்பியாவிலே அரசியல்ராணுவத்தலைமையகங்கள், தொடர்பு சாதனமின் உற்பத்தி மையங்கள், விமான நிலையங்கள் என முக்கிய இடங்களில் விமானத் தாக்குதல்களை மேற்கொள்ளல், மூன்றாவது பொசுனியா முசுலிம்கடகு பாதுகாப்பு வலயங்களை உருவாக்கிப்பேணல், நான்காவது ஆயுதம் பற்றாக் குறையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள முசுலிம் கட்கு ஆயுதம் வழங்கல் என்பனவே அவை. தொடக்கத்தில் விமானத்தாக்குதல் குறித்து ஆர்வம் காட்டிய அமெரிக்கா இப்போது சற்று பின்னடிப்பதாக கூறப்படுகின்றது. பொசுனிய சேர்பியரிடம் ஒரு குறிப்பிட்டளவு சாம் ஏவுகணைகள் இருத்தல், கெரிலாடபோர்முறையை மலைகள் காட்டுப் பகுதிகளுக்கு சென்று சேர்பியர் ஆரம்பித்தல், சேர்பியாவில் விமானத் தாக்குதலை மேற்கொள்வதால்வரும் குடிமக்கள் இழப்புகள், எதிர் விளைவாக சேர்பிய சனாதிபதிக்கு மக்கள் அநுதாபம் ஆதரவு அதிகரிக்க வழிவகுத்தல் போன்ற விளைவுகள் பற்றி அமெரிக்கா மட்டுமன்றி ஏனைய நாடுகளும் பெரிதும் கவலைப் படுகின்றன. பாதுகாப்பு வலயங்களை உருவாக்க- அவற்றினைப் பாதுகாக்க-பெருமளவு தரைத் துருப்புகள் வேண்டும். இழப்புக்கள் குறித்த கவலை காரணமாக அமெரிக்கா போன்றவையே இவ் விடயத்தில் பின்வாங்குகின்றன. நிதிப்பற்றாக்குறையும் இன்னுமொரு காரணம்.

பொசுனியருக்கு ஆயுதம் வழங்குவது பற்றியும் கடுமையாக விவாதிக்கப்பட்டு வருகின்றது. முன்னர் ஆயுதத் தடை விதிக்கப்பட்ட போது சேர்பியரும், குரோசியரும் அதை இலகுவில் மீற, பாதிக்கப்பட்டது பொசுனியமுசுலிம்கள் மட்டுமே. அது மட்டுமன்றி ஒப்பீட்டளவில் பார்க்குமிடத்து (முன்னாள் யூகோசிலேவிய ஒன்றிணைந்த படையிலிருந்த பொசுனிய முசுலிம் வீரர், தொண்டர் உட்பட) 1½ இலட்சம் போர் வீரர்கள் அவர்களிடம் உண்டு. சேர்பியரிடமோ 90ஆயிரமே உண்டு. ஆனால் முசுலிம் படை வீரர்களில் அரைப் பங்கினருக்கு ஆயுதம் இல்லை. அதைவிட ஏறத்தாழ சேர்பியரிடம் 300டாங்கிகள், 200கவச வாகனங்கள் 500 - 1000க்கு இடைப்பட்ட பீரங்கிகள், எறிகணைசெலுத்திகள் உண்டு. ஆனால் முசுலிம்களிடமோ ஒரு சில டாங்கிகள் மட்டுமே உண்டு. எனவே பொசுனிய முசுலிம்கட்கு ஆயுதங்கள் மிகமிக அவசியப்படுகின்றன. குறிப்பாக ஏ. கே. போன்ற தானியங்கி சுடு கருவிகள், இலகு இயந்திரத் துப்பாக்கிகள், 81 எம். எம். போன்ற எறிகணைச் செலுத்திகள், கவச வாகனங்கள், டாங்கிசளைத் துளைக்கும் எதிர்ப்புக் கருவிகள் ஏராளம் தேவை என்று மேற்குலகம் மதிப்பிடுகின்றது. இவற்றினைக் கொள்வனவு செய்ய வேண்டிய பணத்தை தர அரபுலகம் தயாராகவே உள்ளது. ஏற்கனவே பல மில்லியன் டொலர்களை சவுதி மன்னர் குடும்பம் வழங்கியுள்ளது. இன்னும் ஈரான், ஆப்கான், ஏன் எகிப்து கூட உதவி வழங்கத் தயாராக உள்ளன. ஏற்கனவே பல்லாயிரம் மில்லியன் டொலருக்கு ஆயுதங்கள் வேண்டப்பட்டும் எடுத்துச் செல்ல வழியில்லாமல் முசுலிம்கள் தவிக்கின்றனர். தனது பகுதிக்கு ஊடாக ஆயுதங்கள் எடுத்துச் செல்வதானால் தனக்கு அரைவாசி ஆயுதங்கள் தரப்பட வேண்டுமெனக் குரோசியர் அடம் பிடிக்கின்றனர். இதனால் அமெரிக்காவே தனது C-130 ரக போக்குவரத்து விமானங்களின் மூலம் இவற்றினைப் பொசுனியருக்குச் சேர்ப்பிக்க வேண்டுமெனக் கோருவோரும் உள்ளனர். எது எப்படியிருந்தாலும் ஆயுத தடையை முசுலிம்கட்கு நீக்குவதை பிரிட்டன் மிகக் கடுமையாக எதிர்க்கின்றது. ஆயுதங்கள் வன்முறையை மேலும் அதிகரிப்பதோடு இதே ஆயுதங்கள் நாளைக்கு சேர்பிய குடிமக்களுக்கு எதிராக பயன்பட மாட்டா என்பதற்கு என்ன உத்தரவாதம்என்றும் அந்நாடு முட்டுக்கட்டை போடுகின்றது இவ்வாறாக மேற்குலகம் முடிவில்லாத விவாதத்தில் ஈடுபட்டு குழம்பிப்போய் நிற்கின்றது. எத்தீர்மானமும் உருப்படியாக நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையே அற்றுப் போகும் நிலை தோன்றுகின்றது.

ஆகவே இச் சூழலில் பொசுனியா இன்று இசுலாமியர் றோமன் கத்தோலிக்கர், கிழக்கத்திய மரபுவாத யூதர்கள் எனப் பல மத நம்பிக்கையாளரும் முட்டிமோதி வெட்டிக் கொல்லும் அருவருக்கத்தக்க இழிநிலையை அடைந்து உலகின களங்கமாக தோன்றுகின்றது. இக்கட்டுரை எழுதப்படும் இற்றைவரையிலானநிகழ்ச்சிகள் உலகம் எதுவும் செய்யாமல் இருந்து விடுமோஎன்ற அச்சத்தையே தோற்றுவிக்கின்றது. இறுதியாக சேர்பிய ஜனாதிபதி சியோபடான் பலாசவிச் மூலமாவது பொசுனியா பொசுனிய சேர்பியரை வழிக்கு கொண்டு வர எடுத்த முயற்சியும் பயனளிக்கவில்லை. ''பெல்கிரேட்டின் கசாப்புக்காரன்'' என வருணிக்கப்பட்ட மிலோசவிச்சை நம்பி நல்லது நடக்குமா? என்கிறார் ஒரு ஆய்வாளர். இப்போது எது தெளிவாகாவிட்டாலும்ஒரு விடயம் மாத்திரம் மிகத் தெளிவாகிவிட்டது. அதாவது 'அகன்ற சேர்பியா' என்கிற இலக்கை சேர்பியர் அடைந்து கொண்டிருக்கின்றனர் என்பதே அது குரோசியர் கூடமேலதிகமான நிலப்பகுதியை தம்மோடு இணைத்துள்ள இந் நிலையில் எவ்வாறு பொசுனியா பழைய எல்லைகட்கு போகப்போகின்றது? இப்போது குரோசியர் கூட ''சேர்பியர் மட்டும்தாம் விரும்பிய வண்ணம் செயற்படும் போதுநாம்மட்டும்பேசாமல் இருப்பதா?''என்று தமது செய்கைகளுக்கு நியாயம் வேறு கற்பிக்கின்றனர். எனவேமுன்பு பெரும்பான்மை இனமாக (44 வீதம்) வாழ்ந்த பொசுனிய முசுலிம்கள் இன்று மிகச்சிறிய சிறுபான்மை இனமாகி விட்டனர்.

எனவே தற்போதைய நிலை நீடிக்குமானால் முடிவு இப்படித்தான் இருக்கும். பொசுனிய- கேர்சகோவினா என ஒரு காலத்தில் அழைக்கப்பட்ட நாட்டின் பெரும் பகுதி சேர்பியர் வசமும் இன்னொரு பகுதி குரோசியரிடமும் போக மிகுதியாக உள்ள சிறுபகுதியாக செரஜீவோ, சீயா, செபிறினிக்கா, டுஸ்யா, பிசாக் போன்றவை முசுலிம்கள் வாழும் சர்வதேச அமைப்புக்களால் பராமரிக்கப்படும் மனிதாபிமான உதவிகளில் வாழும் நாடாக இருக்கப் போகிறது. ஏற்கனவேஉலக உணவுத் திட்டத்தின் கீழ் 8 இலடசத்திற்கு மேற்பட்ட மக்கள்ஐ. நா விலும்சருவதேச செஞ்சிலுவைச் சங்கத்தாலும் தொடர்ந்து பராமரிக்கப்படுகின்றனர்.

இது ஒரு நிரந்தர அமிசமாக மாறக்கூடும். எதிர்கால நம்பிக்கையற்று சோர்வுற்ற ஒரு ஐ நா. அதிகாரியின் வார்த்தையில் கூறுவதானால் ''இப் பகுதி நீண்ட காலத்திற்கு ஐரோப்பாவின் காசாப்பகுதியாக இருக்கப்போகின்றது. ஐரோப்பியர் என்றுமே கனவு கண்டிராத வகையில் ஐரோப்பியநாடுகட்கு மத்தியில முசுலிம் மையங்கள் அமையப் போகின்றன'' என்றார் பொசுனியாவின் இன்றைய நிலை பற்றி 'பொஸ்டன் குளோப்'' பத்திரிகையில் வந்த கேலிச் சித்திரம் ஒன்று கூறுவது உண்மையாகி விடக்கூடும். பொசுனிய கொடுமைகள் பற்றி ஒவ்வொருமுறையும்மிககாலம் தாழ்த்திக் கூடி விவாதிக்கும் மேற்குலகம் முதலில் கடும் கண்டனம், பொருளாதாரத் தடை, ஆயுதத்தடை, விமானம் பறக்கத்தடை என விதிக்கின்றனர். பின்னர் இறுதியாக கூடி இவற்றின் விளைவுகள் பற்றி மதிப்பிடும்போது ஒரு குரல் ஒலிக்கின்றது. ''இம் முறையும் நாங்கள் பிந்தி விட்டோம். ஏனென்றால் இப்போது பொசுனியாவே இல்லை'' என்கிறது.


## தென்னிந்திய திருச்சபை - யாழ்.பேராயம்
## புதிய பேராயரை
# பதவியில் அமர்த்தும் நிகழ்வு

மே மாதம் 30ஆம் திகதி சென்னை தென்னிந்திய திருச்சபை பேராலயத்தில், தென்னிந்திய திருச்சபையின் புதிய ஆயராக அருட்பொழிவு பெற்ற பேராயர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் (B. A. Dip in Ed., M.A, B. D, ph.D) அவர்களை தென்னிந்திய திருச்சபை - யாழ். பேராயத்தின் மூன்றாவது பேராயராக பதவியில் அமர்த்தும் நிகழ்வு வழிபாடு யூன் மாதம் 12ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு வட்டுக்கோட்டை பேராலயத்தில் பேராயர் ஜெயரட்ணம் அம்பலவாணர் அவர்களின் தலைமையில் நடைபெறும் அதனைத் தொடர்ந்து புதிய பேராயருக்கு யாழ்ப்பாணக் கல்லூரி வளாகத்தில் வரவேற்பு நிகழ்வு நடைபெறும்.

இந்நிகழ்வுகளில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கப்படுகின்றீர்கள்.

அ. அ. போல், செயலாளர்,
தென்னிந்திய திருச்சபை யாழ். பேராயம்

(சி-6813)

# சின்முத்திரை

''இடது கைப்பெருவிரல் மடிந்து ஏனைய நான்கு விரல்களும் ஒருங்கே சேர முழங்கையிலிருந்து முன்கை முழுவதும் நிலைக்குத்தாக நிற்க, வலது கை ஆட்காட்டி விரல் நீண்டு மேற்கு வானத்தை நோக்கி முப்பது பாகை ஏற்றக் கோணத்தில் அமைய முழங்கையிலிருந்து முன்கை முழுவதும் நீள்கிறது''

இஃது ஓர் ஆபிரிக்க வயோதிபரின் கைச்சமிக்ஞை விளக்கம் காண முயல்கிறேன்.

இடதுகைப் பெருவிரலும், ஆட்காட்டி விரலும் ஒன்றுசேர ஏனைய மூன்று விரல்களும் ஒருங்கே சேர்ந்து நிலைக்குத்தாக நிலம் நோக்க, வலது கைப் பெருவிரலும் ஆட்காட்டி விரலும் ஒருங்குசேர ஏனைய மூன்று விரல்களும்ஒன்றுசேர்ந்துநிலைக்குத்தாகவான் நோக்குகின்றன.

இதுவகுப்பறையிலுள்ள படத்தில்தியானத்திலே லயித்திருக்கும் யோகியின் ஹஸ்த முத்திரை. வியாக்கியானம் ஏதோ?

புரியாத மொழியிலே பேசும் அந்த முதியவரைப் பலமுறை அதே இடத்திற் சந்திக்கின்றேன். அவர் பேசுவது ஏதோ ஆபிரிக்க மொழி. நான் தொழில் புரியும் நாட்டு மொழிகளுள் ஒன்றானால் ஓரளவு எனக்கு புரியும்.

இஃது அயல் நாட்டு மொழியாக இருக்கலாம். நாடுகளாற் சூழப்பட்ட ஓர் ஆபிரிக்க நாட்டிலே ஆசிரியராகக் காலத்தை ஓட்டும் எனக்குத் தரப்பட்ட கல்விக் கூடம் ஒரு கிராமத்திலுள்ளது. கிராமத்துச் சந்தையிருக்கும் பாதையைச்சோளக் கொல்லைகளுக் கூடாகச் செல்லும் ஒற்றையடிப் பாதையால் வந்து சேரலாம். ஒற்றையடிப் பாதை வளைந்து நெளிந்து சென்று கள்ளிப் புதர்கள் நிறைந்த ஓர் இடத்தில் மேலும் வளைந்து நெளிய விரும்பாதது போல நேர்கோடாகச் சென்று பிரதான பாதையைச் சேர்கின்றது. அநேகமான சந்தர்ப்பங்களில் கள்ளிப் புதாகளுக்கருகிலேயே அந்தப் பெரிவரைச் சந்திக்கிறேன். எனது நேரசூசியும் அந்தக கிழவரது கால அட்டவணையும் இச்சந்தர்ப்பங்களில் ஒத்துப் போகின்றன.

இடது கைப்பெருவிரல் மடிந்து ஏனைய நானகு விரல்களும ஒருங்கே சேர முழங்கையிலிருந்து முன் கை முழுவதும் நிலைக்குத்தாக நிறக வலது கை ஆட்காட்டி விரல் நீண்டு மேற்கு வானத்தை நோக்கி முப்பது பாகை ஏற்றக் கோணத்தில் அமைய முழங்கையிலிருந்து முன் கை முழுவதும் நீள்கிறது.

வீடு சேர்ந்ததும் அந்தச் சமிக்ஞைக்கு என் மனதிற்பட்ட விளக்கத்தைக் தருகிறேன்.

'நாளை பிற்பகல் நான்கு மணிக்கு நல்ல வற்றாளைக் கிழங்கு கிடைக்கும் போலிருக்கிறது?' அது வற்றாளைக் கிழங்குக் காலம். கிழவன் மறுநாள் கிழங்கு கொண்டுவருவதாகக் கூறியதாக எதுவித ஐயமுமின்றி எனக்குப் பட்டது. குடும்பத்தினர் எதுவித சட்டையும செய்கிறார்களல்லர். கிழவனைப் பொறுத்தவரை நான் எதிர்பார்த்தது இதுவரை தவறாகவே முடிகின்றது.

'புலமை+ஒலி=புலோலி.' பண்டிதர் புணரியல் வகுப்பு நடாத்துகின்றார். நன்னூற் சூத்திரங்கள் பண்டிதரின் ஆகஞைக்குட்பட்டு வண்டியாங்கு வந்து நிற்கின்றன.

மொழி, இலக்கியம், இந்து சமயம் பண்டிதரிடந்தான கற்கவேண்டும். ஏழரை மணிக்கு முன்னரே மாட்டு வண்டியில் வந்து சேரும் பண்டிதர் மாடுகளை அவிழ்த்து, வைககோலை எடுத்து உதறிவிட்டு பாடசாலைக்குள் வந்து விட்டால் பாடம் ஆரம்பமாகிவிடும். மணி அடித்து சம்பிரதாயமாக நடக்கும் வகுப்பை விட பண்டிதரது சம்பிரதாயமற்ற வகுப்பு வெகு சுவாரஸ்யமாக அமையும். நேரத்தோடு வந்து சேர்ந்த மாணவரை வைத்துப் பாடத்தை ஆரம்பிக்கிறார்.

சிவபுராணம் முழுவதும் மனப்பாடமாக்க வேண்டும். பரீட்சையில் ஏதாவது ஒருவரியைத் தந்து தொடர்ந்து பத்துவரிகள் எழுதச் சொல்வார்கள்-இது பாடத்திட்டம். எழுதுவது பரீட்சைக்கு மட்டுமே;

பண்ணோடு பாடுவதுதான் பண்டிதரால் அங்கீகரிக்கப்படும் முதல் பத்து வரிகள் மட்டுமே மனனஞ் செய்திருக்கும் குணரெத்தினம் நாளுக்கொரு ராகத்தில் பாடி தண்டனையிலிருந்து தப்புகிறான். ஒரே வரியைத் திருப்பித் திருப்பி பாடியது தொடர்ந்து மனப்பாடமில்லாமை காரணத்தாலேயே என்பதை அறிந்த பக்கத்து மாணவன் சிரிக்க, குணரெத்தினம் மாயாமாளவ கௌளைக்கு உயிர் கொடுக்கும் முயற்சியைக் கெடுத்த குற்றத்திற்காக பக்கத்து மாணவனோடு சேர்ந்து சிரித்த குற்றத்திற்காக வாங்கிக் கட்டுகிறார்கள் பலர்.

இடதுகைப் பெருவிரலும், ஆட்காட்டி விரலும் ஒன்று சேர ஏனைய மூன்று விரல்களும் ஒருங்கே சேர்ந்து நிலைக்குத்தாக நிலம் நோக்க, வலதுகைப் பெருவிரலும் ஆட்காட்டிவிரலும் ஒருங்கு சேர, ஏனைய மூன்று விரல்களும் ஒன்று சேர்ந்து நிலைக்குத்தாக வான் நோக்குகின்றன.

யோகியின் இந்த முத்திரைக்கு குணரெத்தினம் விளக்கம் தருகின்றான். 'கைகள் பிடித்த நிலையில் இருந்தால் தியானம்; சோர்ந்து விழுந்தால் நித்திரை'.

குளிர் காலமென்றால் வெப்பமானி பூச்சியத்தை எட்டிவிடும். சூரியன் உத்தராயணத்தில் இறுதிக் கட்டத்தை அடையும் வேளை இங்கே குளிர் இரத்தத்தை உறையச் செய்கிறது. ஒரேயொரு மேலங்கியுடன் சமாளிப்பவர்கள் உண்மையில் திடகாத்திரமானவர்கள்தாம் எவரும் எப்படியோ கம்பளிச் சட்டை - கிழிந்ததோ அளவற்றதோ - அணிந்துதான் காணப்படுவர். கள்ளிப் புதரருகில் குந்தியிருக்கும் கிழவர் என்னைக் கண்டதும் எழுந்து வணக்கம் தெரிவிக்கிறார். புரியாத மொழியானாலும் தொனி வணக்கம் என்பதைக் காட்டுகின்றது. மறுவணக்கம் என்னிடமிருந்து வெளிப்படுகின்றது வழக்கமாக வெறுமேயிருக்கும் கிழவரது பாதங்கள் ஒருசோடி சப்பாத்துக்குள் வெதுவெதுப்பைத் தேடிக் கொண்டிருக்கின்றன. கனமான கம்பளிச்சட்டை மேலுடம்பைப் போர்த்தியிருக்கிறது. 'கடும் குளிரா?' என்று வினவுகிறேன். வாய் மொழியைவிட அங்க அசைவுச் சமிக்ஞைகளே கருத்து வெளிப்பாட்டிலே வெற்றிச் சாதனங்களாக அமைகின்றன.

'இந்த முறை குளிர் அதிகந்தான்'. கிழவனாரின் அங்க அசைவுகள் இதைத்தான் கூறுகின்றன. ஒவ்வொரு வருடக் குளிர்காலத்திலும் இவ்வாறுதான் கூறுகிறார்கள் வயது ஏற ஏறக் குளிர் அதிகமாகத் தெரிகிறதோ?

---

**ஆர்.பாலகிருஷ்ணன்**

---

இடதுகைப் பெருவிரல் மடிந்து ஏனைய நான்கு விரல்களும் ஒருங்கே சேர முழங்கையிலிருந்து முன்கை முழுவதும் நிலைக்குத்தாக நிற்க. வலதுகை ஆட்காட்டி விரல் நீண்டு மேற்கு வானத்தை நோக்கி முப்பது பாகை ஏற்றக் கோணத்தில் அமைய முழங்கையிலிருந்து முன்கை முழுவதும் நீள்கிறது.

இன்று வீட்டிலே வேறொரு செய்தி தருகிறேன் 'நாளை சாயந்திரம் ஒரு சாக்கு நிறைய நிலக்கடலை கிடைக்கும் போலிருக்கிறது' கிழவரைப் பற்றியே குறிப்பிடுகிறேன் என்பது வீட்டிலுள்ளோருக்குத் தெரியும். ஆனால் எதுவித சட்டையும் செய்கிறார்களல்லர்.

பண்டிதர் வெறும் மேலுடன் வீபூதிப் பூச்சுக்களுடன் பாடசாலைக்கு வருகை தருகிறார். விரத காலங்களில் அவரது கோலம் அப்படித்தான் அமையும். நாவலரது சைவ வினாவிடையிலே ''விபூதி பூசப்பட வேண்டிய இடங்கள் யாவை?'' என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டும் கட்புல உத்தியாக மிளிர்கிறார் பண்டிதர். நரம்புகள் சந்திக்கும் இடங்களிலே விபூதி பூசுவதால் நரம்புத் தொகுதி வலிமை பெறும் என்பது பண்டிதரது விஞ்ஞான விளக்கமாகும். வெறும் மேலுடன் ''வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும்...'' என்றோ, ''தடம் புயம் குலுங்கிட நகையா...'' என்றோ வரும் பாடல்களுக்கு விளக்கம் தருவாரானால் வெகு தத்ரூபமாக இருக்கும்.

இடது கைப் பெருவிரலும் ஆட்காட்டி விரலும ஒன்று சேர ஏனைய மூன்று விரல்களும் ஒருங்கே சேர்ந்து நிலைக்குத்தாக நிலம் நோக்க, வலது கைப் பெருவிரலும் ஆட்காட்டி விரலும் ஒருங்கு சேர ஏனைய மூன்று விரல்களும் ஒன்று சேர்ந்து நிலைக்குத்தாக வான் நோக்குகின்றன.

குணரெத்தினத்தின் புது விளக்கம்: பெதிதப்பா மூக்குப் பொடி போடுவதற்கு ஆயத்தம் செய்வது இப்படித்தான் இருக்கும்.

இந்த விளக்கம் நிச்சயமாகப் பண்டிதருக்கு ஆத்திரத்தை ஊட்டக் கூடியது.

கடும் வெயில். கனம் குறைந்த உடுப்புடன் நிலத்தை நோக்கிய பார்வையுடன் செல்லும் முதியவர் என்னை அணுகியதும் நிமிர்கிறார். ''வந்தனம்'' ''பதில் வந்தனம்'' சமிக்ஞைகள் சரளமான மொழியாகிவிட்டன. பெரியவரது ஒரு கையிலே ஐந்து லீற்றர் கொள்கலன் தண்ணீருடன் கனக்கின்றது. கிராம சபைக் குழாயிலே தண்ணீர் இல்லை. ஆற்றிலே மொண்ட நீர் அவருக்கு இரவுப் பொழுதைத் தாக்குப் பிடிக்கும். காலையிலும் குழாயிலே நீர் இல்லாவிட்டால் மீண்டும் ஆற்றுக்கு வரவேண்டியது தான். கோடையிலே ஏற்படும் நீர்த் தட்டுப்பாடு வருடந்தோறும் வரும் பழகிவிட்ட அனுபவமாகும். ஆற்றிலே நீர்மட்டம் குறையும்போது குழாய் நீர்த் தட்டுப்பாடு வருகிறது.

'நயாக்ரா'வைவிடப் பெரிய நீர்வீழ்ச்சி இங்கே இருக்கிறது. நீர்மட்டம் உயர்ந்துள்ள காலத்தில வெகு தூரத்தில் இருக்கும் பொழுதே நீர்வீழ்ச்சியின் ஓசை இடைவிடாது இயங்கும் ஒரு பாரிய ஆலையை நினைவூட்டும். தொலைவிலேயே செவியுணர்வைத் தாக்கும் இந்த நீர்வீழ்ச்சி அண்மித்ததும் கட்புலனை உறுத்த ஆரம்பிக்கின்றது. நீர்த்திவலைகள் பனிமண்டலமோ புகைமண்டலமோ என்று பேதங்காண முடியாதவாறு ஆகாயத்தை நிறைக்கின்றன. உயரத்தேயிருந்து அதலபாதாளத்தை நோக்கி விழும் நீர், நிலத்திலே மோதி, சற்று வெப்பமாகி, நீர்த்திவலைகளாகக் காற்றிலே எழுந்து ஆகாயத்தை நிரப்பும் பொழுது பிருதிவி, அப்பு, தேயு, வாயு ஆகாயமாகிய பஞ்சபூதங்களும் சங்கமமாகும் இயற்கையின் இயக்கக் காட்சியாகின்றது. உள்ளூர் மக்களால் 'புகைக்கும் இடியேறு' எனப் பெயரிடப்பட்டு வெண்ணிலவிலே கூட வண்ண வானவில்லையுண்டாக்குகின்றது.

மின்சக்தியை உண்டாக்கி, பாரிய ஆலைகளைச்செயற்படுத்தி நாட்டை வளப்படுத்தும் நீர் சில சமயங்களில்வற்றிப்போவதுமுண்டு. கனக்கும் நீர்க் கொள்கலனைக் கீழே வைக்கிறார் கிழவனார்.

இடது கைப்பெருவிரல் மடிந்து ஏனைய நான்கு விரல்களும் ஒருங்கே சேர முழங்கையிலிருந்து முன்கை முழுவதும் நிலக்கிடையாக நிற்க, வலதுகை ஆட்காட்டி விரல் நீண்டு மேற்கு வானத்தை நோக்கி முப்பது பாகை ஏற்றக் கோணத்தில் அமைய முழங்கையிலிருந்து முன்கை முழுவதும் நீள்கிறது.

வீட்டுக்குத் திரும்பியதும் புதிய ஒரு விளக்கம் எனக்குத் தென்படுகின்றது.

'நாளைக்கு நமக்கு ஒரு வெள்ளாடு கொண்டுவருவதாகக் கூறுகிறார்' கிழவனாரின் சமிக்ஞைக்குப் பிறிதொரு விளக்கம் கூறுகிறேன் என்று எண்ணிக் கொண்டு வீட்டிலுள்ளோர் எதுவித சலனமுமின்றித் தத்தமது கருமமே கண்ணாயிருக்கின்றார்கள்.

'பசு, பதி, பாசம்-நடுவிரல், பெருவிரல், சின்னவிரல்' -பண்டிதர் இடதுகை விரல்களை அகற்றிப் பிடித்தபடி வலதுகை சுட்டு விரலால் தொட்டுத்தொட்டு விளக்குகிறார். பசுவுக்கும் பதிக்குமிடையேயுள்ள ஆள் காட்டிவிரல் சிவசக்தி; பசுவுக்கும் பாசத்திற்குமிடையேயுள்ள மோதிரவிரல் திரோதான சக்தியாகும். இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் ஆன்மா -பரிணாமத்துட்பட்டு மேல்நிலையடைகின்றது. விஞ்ஞானப் பதங்களைப் பயன்படுத்துவதிலே பண்டிதர் பெரு மகிழ்ச்சியடைகின்றார். சிவசக்தி ஆன்மாவைப் பிடித்துப் பதியுடன் சேர்ப்பதையே சுட்டுவிரல் பெருவிரல் இணைப்புக் காட்டுகின்றது. பாசங்கள் நிலம் நோக்கித் தாழ்ந்து போக ஆன்மா வான் நோக்கி உயர்வடைகின்றது.

வகுப்பறைப்பாடத்திலுள்ள யோகியின் கைச்சின்னத்துக்குரிய விளக்கம் கிடைக்கின்றது. 'மூக்குப் பொடியோடும் சின்னம் என்று கூறும் மூடரும் உளர்' என்று குணரெத்தினத்தைப் பார்த்து தடம்புயம் குலுங்கிடச் சிரிக்கிறார் பண்டிதர்.

ஆண்டுகள் இரண்டு ஓடி விடுகின்றன. கிழவருக்கு இரண்டு ஆண்டு முதுமை ஏறுகின்றது. அவரது சின்னத்தை விளக்க இன்னும் ஒரு பண்டிதர் கிடைக்கவில்லை.

---

## வியப்போ ?

தமிழரின் வீடுகள்
உடைத்திடும் ஆட்சியில்
தமிழரின் கடிதங்கள்
உடைத்திடல் வியப்போ ?

## விடுதலை !

கெடுதலைத் தடுத்திட
விடுதலை வேண்டும் !
விடுதலை பெற்றிடத்
துணிதலே வேண்டும் !

-சரவணன்

# சங்க கால காதல் யுகத்திற்கு பின்னோக்கிச் செல்லமுடியாது

நாட்டில் நெருப்பாகப் பூத்திருக்கும் மொழிப் பிரச்சினை போன்றே சீதனப் பிரச்சினையும் நன்றாகப் புரையோடி இருக்கும் பிரச்சினையாகும்.

விவாத மேடையில் இதுவரை பத்துக்கும் மேற்பட்டோர் கருத்துக்களை முன்வைத்துள்ளனர். இவர்களில் இருவர் காதல் திருமணங்கள் தான் சீதனப் பிரச்சினைக்கு முடிவைத்தரும் என்றனர்.

மற்றுமிருவர் சட்டங்கள் போட்டு மட்டுப் படுத்த முடியும் என்றனர். 'இளையவன்' தாம்பத்திய வாழ்க்கை சிறக்க முதலீடு சிறப்பாக அமையும் என்றார்.

அநேகமான கட்டுரையாளர்கள் இன்னொருவரின் கருத்தை எதிர்த்து வாதப் பிரதிவாதங்களை முன்வைத்தார்களே அன்றி சீதனப் பிரச்சினைக்கு தீர்வாக எந்த அபிப்பிராயங்களையும் சொல்ல முனையவில்லை.

நான் இந்தச் சமுதாயத்தின் முற்று முழுதான மாற்றம் தான் சீதனப் பிரச்சினைக்கு மட்டுமன்றி பல்வேறு பிரச்சினைகளுக்கும் முடிவைத் தருமென்ற கருத்தை கூறியிருந்தேன்.

விவாதத்தை ஆரம்பித்து வைததிருந்த க தணிகாசலம் ஆசிரியர் இரண்டாவதாக எழுதிய கட்டுரையில் சீதனப் பிரச்சினைக்கு காதல் திருமணங்கள் தான் முடிவைத் தருமென்பதற்கு சங்ககால இலககியங்களில் இருந்து சான்றுகளைத் தந்திருந்தார்.

ஒரு காலக் கூற்றில் தமிழ் சமுதாயத்தில் 'சீதனம்' என்ற பளுவும், கொடுமையும் இல்லாத காதல் இல்லறங்கள் அமைந்திருந்ததை த ணிகாசலம் ஆசிரியரின் கட்டுரையை நுகர் கையில் அனுபவித்து மகிழ முடிந்தது.

அந்தச் சங்க காலத்திற்கு நாம் பின்நோக்கிச் செல்ல முடியுமா? எவ்வளவோ மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன. ஆசிரியரின் ஆதங்கம் பின்நோக்கிச் செல்வதெனபதல்ல. 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்ற பாங்கில் கழியும் பழையன இன்னொரு யுகத்தில் புதியதாய் மாறுதல் போல் வாராவோ என்றிருக்கலாம்.

அது நடைமுறைச்சாத்தியம் இல்லை என்பது தெளிபு. பலர் பலவாறாக சீதனம் வழங்கப்பட்ட முறைமையை கட்டுரைகளில் விபரித்து இருந்தனர்.

மேலாதிக்கம் கொண்ட, ஆண்மை தலையெடுத்த பெண் அடிமைச் சமுதாயம் என்ற நிலையில் இருக்கும் இன்றைய காலச்சூழலில் ஆண்மகனே வீட்டைவிட்டு வெளியில் சென்று தொழில் செய்து பணம் பண்ணும் நடைமுறை இருந்து வருகிறது.

ஒரு ஆணுக்கும்-பெண்ணுக்கும் திருமண உறவைத் தொடக்கி வைக்கும் பெற்றோர் அந்த ஆணின் வருவாயில் தங்கி நிற்கும் பெண்ணின் எதிர்காலம் அவனது சடுதி முடிவுகளால் பாதிக்கப்பட்டு விடாமல் இருக்கவே பெண்ணுக்கு 'சீதனம்' என்னும் எதிர்கால வாழ்க்கைக்கான முதலீட்டை வழங்கி வந்தனர் என்றுகொள்வதற்கு காரண காரியங்கள் இருக்கின்றன.

அந்தச் சீதன முறைமை கலக்கிரமத்தில்பெருவளர்ச்சி பெற்று வியாபாரத்திற்கான முதலீடு போன்று ஆண்-பெண் வீட்டாரிடையில் பேரம் பேசி முடிவு காணும் விவகாரமாக மாறிவிட்டது.

## தேவி பரமலிங்கம்

எது எப்படி இருந்தபோதும் மனித வரலாற்றில் இடையில் தோன்றிய ஒருசில நடைமுறைகள் இடையில் இல்லாது ஒழிந்துவிடும் என்பதுதான் நியதி.

அந்த வகையில் மனித சமுதாயத்தில் ஏற்படுகின்ற முற்று முழுதான மாற்றங்கள்தான் சமுதாய வழக்கு முறைகளில் உள்ள பழக்க வழக்கங்களை மாற்றி அமைக்கும் என்பதே எனது கருத்தாகும்.

அவை ஒருபுறமிருக்க, கடந்த வாரம் (4-6-93) விவாதக் கட்டுரையை எழுதி இருந்த ஆசிரியர் ம. ஆனந்தநடராசன் எனது கட்டுரையில் கூறப்பட்டிருந்த கருத்தொன்றுக்கு பதிலளிக்கையில் ''யாழ்ப்பாணத்தில் மேல்வர்க்கம் என்பது இல்லை என்றே சொல்லலாம். (தமிழீழத்திலும் இல்லை என்றே சொல்லலாம்) மேல் வர்க்கம் எல்லாம் கொழும்புடனோ அல்லது பிறநாட்டுடனோ தம்மை முழுமையாக இணைத்துக்கொண்டு விட்டார்கள்'' என்கிறார்.

## சமூக மாற்றமே சீதன ஒழிப்பிற்கு வழி

இவரது கூற்றில் ஓரளவுக்கு உண்மை இருப்பதை 1990களுக்கு பிற்பாடு ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஏனெனில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இருந்த மேல் வர்க்கம் என்று சொல்லப்படத்தக்கவர்கள் இப்பொழுது தமது மண்ணில் ஏற்பட்டிருக்கும் எதிர்கால மீட்சிக்கான போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்தத் தயங்கி கொழும்புடனோ அல்லது பிற நாட்டுடனோ இணைத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள்.

ஆனால் ஆசிரியர்ம ஆனந்தநடராசன் கூறியது போல் இங்கே மேல்வர்க்க நிலையினர் இல்லை என்று அறுதியிட்டுக் கூறிவிடமுடியாது.

அதற்கான சில உதாரணங்களை இக்கட்டுரையில் கூற முனைகிறேன். இவ்வுதாரணங்களுக்கு எந்தவித சட்ட மூலமான ஆவணங்களோ- சாட்சிகளோ என்னால் நிறுத்த முடியாவிட்டாலும் யாழ்ப்பாண வரலாற்றுப் பாங்கில் அதற்கு சான்றுகள் அதிகம் உண்டு.

எமது மண்ணிலும் மேல் வர்க்கம் ஒன்று உண்டு என்பதற்கு முதலாவதாக புத்தூர் மழவராயர் பரம்பரையினரை இனம் காட்டலாம் மற்றும் மானிப்பாய்-நவாலி முதலியார் மகேசன் பரம்பரை- சேர் பொன். இராமநாதன் பரம்பரை- ஜீ. ஜீ பொன்னம்பலம் பரம்பரை இப்படிப் பல பரம்பரையினரை எமது மண்ணின்மேல்வர்க்கத்திற்கு உதாரணம் காட்டலாம்.

திரு. ஜீ. ஜீ பொன்னம்பலம் தமது புத்திரியின் திருமணத்தின் போது வயது ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபா (அதுவும் இற்றைக்கு இரு தசாப்தங்களுக்கு முன்பாக) வழங்கியதாகக் கதைகள் உண்டு. அவர்களுக்கு கட்டுரையாளர் கூறியது போன்று இங்கே இருப்பதை விடவும் அதிகசொத்துக்கள் கொழும்பிலும் - பிறநாடுகளிலும் இருப்பது உண்மையே.

மேலும் கொழும்புத்துறைக்கு அப்பால் 'மணியம் தோட்டம்' என வழங்கப்படுகின்ற பெரும் நிலப்பரப்பு ஒரு பரம்பரையினருக்கு சொந்தமாக இருந்திருக்கின்றன. அதுமட்டுமன்றி வெவ்வேறு இடங்களில் அவ்வாறான காணிகள் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குச் சொந்தமாக இருந்து வந்திருக்கின்றன. இவை எமது மத்தியில் நிலப் பிரபுத்துவ சமுதாயம் ஒன்று இருந்ததற்குச் சான்று பகர்கின்றன.

அந் நிலபுலங்கள் இப்பொழுது எமது போராளிகளினால் சுவீகரிக்கப்பட்டு இருப்பிட வசதியற்ற ஆயிரக்கணக்கான ஏழைக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

இச் சொத்துக்கள் அனைத்தும் எமது மண்ணின் மைந்தர்களில் ஒரு கூட்டத்தினர் ஆங்கிலேய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்காரர்களுக்கு சேவகம் செய்ததன் மூலமாக சுவீகரித்துக் கொண்டவை தாம். இவ்வாறே ஏனைய இடங்கள் -நாடுகளிலும் வாழ்கின்ற மேல்வர்க்கச் சமுதாயமும் என்பது வெள்ளிடைமலை.

ஆனந்தநடராசனின் மற்றொரு முன்வைப்பு ''யாழ்ப்பாணத்தில் வாழும் பெரும் பான்மையான மக்கள் மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும். பிரச்சினையின் கருவாக இப்பெரும் பான்மை மத்திய தர வர்க்க யாழ்ப்பாணச் சமுதாயம் இருக்கும் போது அரைவாசிப் பேருக்கு மேல் பிரச்சினை இல்லை என்று சொல்ல முற்படுவது எவ்வளவிற்கு ஏற்புடையதாக இருக்கும்?''

இதற்கு எனது முன்னைய கட்டுரையிலேயே தெளிவாக பதில் சொல்லியுள்ளேன்.

மத்தியதர வர்க்கம் என்பது இன்னொருவரின் உழைப்பில் தான் முன்னேறப் பார்க்கும் ஒரு வகையினர். இவர்களுக்குச் சீதனம் கொடுக்க - வாங்க முடியுமானால் பிரச்சினை ஏன் எழுகிறது?

அந்த வர்க்கத்தைச் சார்ந்த பெண்கள் 'கன்னி கழியாமல்' நீண்ட பெருமூச்சுகளை ஏன் விடவேண்டும்?

இறகு ஒடிந்த நிலையிலும் உயரப்பறக்க நினைக்கும் இவர்களை கானல் நீரைப் பார்த்து ஏமாறும்பேர்வழிகள் என்று தானே குறிப்பிட்டிருந்தேன்.

ஆக, இவர்களை மத்தியதர வர்க்கத்துக்கு உயர்த்தாமல் ஏழைகள் வரிசையில் தான் பார்க்க வேண்டும்.

இன்றைய எமது மண்ணில் அந்நியன் மேற்கொண்டிருக்கும் ஒரு தேவையற்ற போராலும் எமது இளைஞர்களின் போராட்ட உணர்வை மழுங்கடிக்க மேற்கொண்டுள்ள பொருளாதாரத் தடைகள் காரணமாகவும் இன்றைய தமிழீழப் பரப்பில் ஏழை மக்கள் தான் நூற்றுக்குத் தொண்ணூறு சத விகிதத்தினர் என்பதைக் கூறத்தேவையில்லை.

இந்த ஏழைமக்கள் மத்தியில் கொடுப்பதற்கு வழி இருந்தால்தானே வாங்குவதற்கும் ஆள் இருக்கும் என்றாலும் 'கல்யாணம் காட்சி' என்றுநடக்காமலா இருக்கிறது?

இன்றைய யாழ்ப்பாணச் சூழலில் மத்தியதரவர்க்கத்தை விடவும் அதிகமான மக்கள் அடிமட்ட ஏழைகள்தான் என்பதை ஆசிரியர் தெரிந்து கொண்டால் எனது கூற்று சரியெனப்படும்.


'ஆர் குத்தினாலும் அரிசியானால் சரி' என்பதற்கு இணங்க எமது விவாத மேடையின் முக்கிய நோக்கம் சீதனப்பிரச்சினையை அடியோடு இல்லாமல் ஒழிக்க மார்க்கமென்ன என்பதாகத்தான் இருக்கும்.

கட்டுரையாளர் ஒருசிலரைப் போன்று சீதனம் ஆண்-பெண் இருபகுதியினருக்கும் வேதனை தருகின்றஒன்று என்ற முடிவை எய்தி பேசாமல் இருந்துவிட முடியுமா?

முற்று முழுதான சமுதாய மாற்றம்தான் சீதனப் பிரச்சினைக்கு வழி வகுக்கும் என்பதை விடவும் இன்னொரு கருத்தை நான் முன் வைப்பதானால்.

மொழி - இனப்பிரச்சினைக்கு போராட்டம் தான் முடிவை- விடிவை எமதுமண்ணில் தோற்றுவிக்கும் என்பதை நாமேற்றுக் கொள்கிறோம். அந்தப் போராட்டப் பாதையில் இந்த மண்ணில் போராளிகள் சாதித்தவை எத்தனை எத்தனையோ-

அவற்றில் ஒன்றாக இந்தச் சீதனப் பிரச்சினையையும் எடுத்துக் கொண்டு அவர்கள் ஒரு தீர்வை இந்த மண்ணின்-மண்ணில் வாழும் மக்கள்நலன் கருதி வழங்கி இதற்கொரு முடிவை தரலாமென்பதும் எனது தாழ்மையான கருத்தாகும்.




(சி-6794)

## கல்வியில் பால் சமமின்மை

இலங்கையில் கலை மற்றும் விஞ்ஞான பயிற்சிகளுக்கு பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்களில் பால் சமநிலையின்மை நிலவுவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. 1980 களில் கலைத்துறைக்கு அனுமதி பெற்ற மாணவர்களில் 65சதவீதம் பெண்கள். ஆயினும் பொறியியல் கட்டடக்கலை, விவசாய விஞ்ஞானம், விஞ்ஞானம் ஆகிய பயிற்சி நெறிகளில் அவர்களுடைய விகிதாசாரம் குறைவாகவேயுள்ளது. விஞ்ஞானத்துறையில் உயிரியல் விஞ்ஞானத் துறைக்கு அதிகமான பெண்களும்பௌதிக விஞ்ஞானத் துறைக்கு அதிகமான ஆண்களும் தெரிவாகியுள்ளனர். 1970களில் உயிரியல் விஞ்ஞானத் துறைக்கு 65சதவீதமான பெண்களும் பௌதிக விஞ்ஞானத்துறைக்கு 15சதவீதமானபெண்களும் தெரிவாகியுள்ளனர். மருத்துவம் சட்டம் ஆகியவற்றில் பெண்களின்பங்கு கணிசமாக உள்ளது.


# திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன

பொ. காங்கேயன்
(சட்டத்தரணி)

பெண் ஒருவருக்கு பெற்றார் திருமணத்தின் போது பல வகைச் சிறப்புக்களை-ஆபரணங்கள் அணிவித்துப் பணரொக்கம் கொடுத்து வாழ மனை கொடுத்துச் செய்வது யாழ்ப்பாணத்து அரசர்காலத்தில் இருந்து வரும் பழக்கம். பெண்ணை பெற்ற ஒவ்வொருவரும் தத்தமது தகுதிக்கு ஏற்பத் தாம் பெற்ற பிள்ளைக்கு செய்து வரும் சிறப்பான சீர் வரிசையே சீதனம் என நாளடைவில் பெயர் பெற்றது. சீதனத்தை அளவு கணக்கின்றி வழங்கத் தகுதியுடைய பெற்றார் சொந்தத்தில் மாப்பிளை எடுக்கக் கூடிய வாய்ப்பிருந்தும், சொந்தத்தில்உள்ள மாப்பிளையை அவன் பெண்ணை விரும்பி இருந்த சந்தர்ப்பத்திலும் புறக்கணித்து வெளியில் மாப்பிளை பார்த்த சந்தர்ப்பங்கள் ஏராளம். மச்சாள் மச்சானை திருமணம் செய்வது என்ற கட்டுப்பாடு உள்ள காலத்தில் சீதனம் சேர்ப்பது பெற்றாரின் கடமை என்ற கோட்பாடு இருக்கவில்லை. பெற்றார் தமது சகலபிள்ளைக்கும் அவர்கள் வாழ்க்கையில் உயர்ந்த தகுதியடிப்படையையும், பாச அடிப்படையையும், தமது சொற்படி ஒழுகும் தன்மையையும் நோக்கி ஏதோ தம் மாலியன்றவற்றை மட்டும்எதுவித சிரமமும் இன்றி மனமகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் கொடுத்து வந்தனர். மிதமான சீதனம் வைத்திருப்பவர்கள் தமது குடும்பத்தை விட்டுவெளியே மாப்பிளையை எடுக்கும் பொழுது வேறு ஒரு ஏழைப் பெண்ணின் கனவுகளுக்கும் உலைவைக்கிறார்கள். ஏழைப் பெண்ணின் மச்சான் சிறப்பான தகுதியைச் சமூகத்தில் அடைந்திருப்பான். சீதனம் என்ற திடீர் பொருளாதார மேமபாட்டை கருத்தில் கொண்டு சொந்த, நம்பியிருந்த மச்சாளைக் கைவிட்டு புறத்தியில் சம்மந்தம் செய்யும் ஆடவர் பலர்.

பொருளாதார மேம்பாடு ஒன்றையே கருத்தில் வைத்துப் புறத்தியில் திருமணம் செய்யும ஆணையும், உத்தியோக சிறப்பை கருத்தில் வைத்தும் புறத்தியில் திருமணம் செய்யும் பெண்ணையும் சீதனப் பரிமாற்றம் தண்டனைக்குரியதென விளம்புவதினால் அடக்குவது பயனில் முயற்சி. ஒருவர் சொந்தத்திற்குள் தான் திருமணம் செய்ய வேண்டும் என்று சட்டம் இயற்றினாலும் சீதன ஒழிப்பு நடைபெறாது. இரு பகுதியினரும் விஞ்ஞான காரணங்கள். நடத்தைப் பிசகுகளை சுட்டிக் காட்டுவார்கள். சீதனம் கொடுப்பதும் சீதனம் ஏற்பதும் இழிவு என மக்கள் உணர வேண்டும். ஏற்பது இகழ்ச்சி என - ஔவையார் கூறியுள்ளார். சீதன ஒழிப்பு சாத்தியமானது அல்ல என்றாலும் கட்டாயமாக இக்கால கட்டத்தில் முயற்சிக்கப்பட வேண்டியது. இன்று இலட்சக்கணக்கான தமிழர்கள் தமது வீடு வாசல் மற்றும் விலை மதிப்பற்ற பொருள்களை இழந்து அகதிகளாக நிற்கும் காலவேளையில்சீதனஒழிப்பை நயத்தாலும் பயத்தாலும் அமுல் படுத்துவது பாதிக்கப் பட்டோருக்கு ஒரு சொர்க்க வாசலாக அமையும். நாட்டுப்பிரச்சினையில் பாதிக்கப்படாதோர் பல நியாயங்களை கற்பிக்கலாம். ஆனால் அவர்களுக்கு தாமும் ஒருக்கால் அகதிகளாக வரக்கூடும் என்பதை நன்குணர வேண்டும். உள்ளவளும் இல்லாதவளும் மனமொத்துச் சீதனம் எனும் பழக்கத்தை ஒழிக்க இக்கால சூழ்நிலை நன்றாக உதவும். சீதனம் வாங்கி இக்காலகட்டத்தில் திருமணம் செய்பவர் தம்மைப் பெற்ற தாயையும் தமிழ் மண்ணையும் இழிவு படுத்துவர் எனக் கருத்துக் கொள்ளல் பொருந்தும்.

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்பதை யாவரும் நன்குணர வேண்டும். இட்டமுடன் இன்னதென ஒரு தலையெழுத்து உள்ளது. சீதனம் கொடுத்து மாப்பிளையை விலைக்கு வாங்கலாம். அமைதியான மகிழ்ச்சியுடன் பொருந்திய வளமான வாழ்வு புதுமணத் தம்பதிகளுக்கு இல்லாமற் போன சம்பவங்களுக்கு எடுத்துக்காட்டு. நாள்தோறும்நீதிமன்றங்களில் காணும் அவலங்கள். மனம் பொருந்தியதே வாழ்க்கை இளம் சந்ததியினர் யாவரும் சீதனத்தைத் திருமணத்துக்கு ஒரு கட்டாயமான அங்கமாக நினைக்காமல் மகிழ்ச்சியான கற்புள்ள வாழ்க்கையே சிறந்தது என முடிவெடுத்து பெண்ணொருவரை வாழ்க்கைத் துணைவியாகஏற்பதற்குவிலை பேசும் இழி வழக்கத்தைக் கைவிட்டு யாழ்ப்பாணத் தமிழன் தனது சிந்தனையிலும் செயலிலும் முன்னேற்றமடைந்து வெகு நாகரிகமாய் விட்டான் என்பதை பறை சாற்றுவது தமிழ்த் தாய்க்கு அவன் செய்யும் அரும் பெரும் தொண்டு




ரேஸ்ரியின் சுற்றுப்போட்டியில் பங்கு பற்றுவதற்கான நிபந்தனைகள்:-

பியர், ஜாம் அல்லது கோடியல் போத்தல்களில் ஏதாவது ஐந்தைக் கொடுத்து அதற்குரிய பணத்தையும் அதற்குரிய அதிர்ஷ்டலாபசீட்டையும் பெற்றுக்கொள்ளவும். ஒவ்வொரு குலுக்கலும் மாதாந்த முடிவில் நடைபெறும்.

1 ஆம் பரிசு – சுவர்க்கடிகாரம்
2 ஆம் பரிசு – எவர் சில்வர் வீட்டுப் பாவனைப்பொருள்கள்.
3 ஆம் பரிசு - மாணவருக்கான பாடசாலை உபகரணங்கள்.
மேலும் பத்து ஆறுதல் பரிசுகள்

போத்தல்கள் ஒப்படைக்கவேண்டிய இடங்கள்:-

(1) ரேஸ்லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட் 14, சீனியர் வீதி, யாழ்ப்பாணம் (2) அறிவகம்-சாவகச்சேரி (3) சுபாஸ் பேக்கவுஸ்-நெல்லியடி (4) சுந்தரம் அன்சன்ஸ் சுன்னாகம் (5) சித்தி விநாயகர் நூல் நிலையம் ஏழாலை மேற்கு (6) சபாரிஸ் சுண்டுக்குளி (7) நீதினி Q சுன்னாகம் (8) செ. சுரேஸ் சோமசுந்தரப்புலவர் வீதி, நவாலி வடக்கு மானிப்பாய் (9) ஸ்கந்தா மாஸ்ரர் சங்கரத்தை சந்தி வட்டுக்கோட்டை (10) இ. இராசதுரை பத்திரிகை விற்பனை நிலையம் இருபாலை சந்தி.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(சி-6617)

மீண்டும் யாழ்நகரில்
றொலெக்ஸ் ஸ்தாபனத்தாரின்
**தேன் சிந்தும் ஐஸ்கிறீம்**
வகைகள் !

ஸ்பெசல் ஐஸ்கிறீம் புறூட் சலட் ஐஸ்கிறீம்
சொக்லட் ஐஸ்கிறீம் வனிலா ஐஸ்கிறீம்
மற்றும் சர்பத், கிறீம் சர்பத், ஐஸ் கோப்பி
அனைத்து குளிர்பான வகைகளுக்கும் சுவைமிகு
கோழிப்புரியாணி வகைகளுக்கும் மீண்டும்

★ உங்களை அழைக்கின்றார்கள் ★
''ஹொட்டல் றொலெக்ஸ் ஸ்தாபனத்தார்''
**ஹொட்டல் றொலெக்ஸ்**
340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/5028)

## கண் சத்திர சிகிச்சைக்குப் பின் புதிய ரக பிளாஸ்ரிக் கண்ணாடி

கண்புரை அறுவைச்சிகிச்சை செய்து கொள்வோர், அந்த அறுவைச்சிகிச்சைக்குப் பிறகு மருத்துவமனையில் சில நாட்கள் தங்கி இருக்க வேண்டிய கட்டாயம் இருந்து வந்தது. அத்துடன் அவர்கள் தடித்த மூக்குக் கண்ணாடிகளை தங்கள் வாழ்நாள் முழுதும் அணிந்து தீரவேண்டிய நிர்ப்பந்தமும் இருந்தது.

இந்நிலை இப்போது அப்படியே மாறிவிட்டது.

இப்போது கண்புரை அறுவைச் சிகிச்சை செய்து கொள்பவர்கள், அன்றைய தினமே வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டு விடுகின்றனர். மூக்குக் கண்ணாடிகளுக்குப் பதிலாகக் கண்ணுக்கு உள்ளேயே பொருத்திக் கொள்ளக் கூடிய லென்சுகளும் புழக்கத்திற்கு வந்து விட்டன. அமெரிக்காவில் பொஸ்டன் நகரில் உள்ள மாஸாசூஸட்ஸ்கண்சிகிச்சை மருத்துவமனையைச் சேர்ந்த மேரி கில்பர்ட் இதனைத் தெரிவித்துள்ளார்.

கண்ணுக்குள் இருக்கும் இயற்கையான லென்ஸ் வெளியில் இருந்து வரும் ஒளியைக் கிரகித்து விழித் திரையில் குவிப்பதற்குப் பயன்படுகிறது. இந்த லென்ஸ் மங்கிப் போவதுதான் ''கண்புரை'' என்று அழைக்கப்படுகின்றது.

லென்ஸ் மங்கி விடுவதால் ஒளியானது விழித்திரையைச் சரியாகச் சென்றடைவதில்லை இதனால்தான் பார்வையும் மங்கலாகத் தெரிகிறது.

இவ்வாறு மங்கிப்போன லென்ஸ் கண்ணிலிருந்து அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றப்பட்டு விடுகிறது. இது தான் கண்புரை அறுவைச் சிகிச்சையாகும்.

அகற்றப்பட்ட லென்சுக்கு ஈடுகட்டுவதற்காகத்தான் தடித்த லென்சுடன் கூடிய மூக்குக் கண்ணாடி கொடுக்கப்பட்டு வந்தது.

மூக்குக் கண்ணாடிபோட்டுக் கொள்ள விரும்பாதவர்கள் கண்ணோடு ஒட்டியிருக்குமாறு அணியக்கூடிய கண்ணாடி லென்சுகள் சென்ற நூற்றாண்டின் இறுதியிலிருந்தே பாவனைக்கு வந்தன. இவை பின்னர் பிளாஸ்ரிக்கினால் ஆக்கப்பட்டு கண்ணாடி மூலம் பார்வைக் குறைபாட்டை நீக்கக்கூடிய எல்லா சந்தர்ப்பங்களிலும் இவ்வாறான லென்சுகள் பயன்படுத்தப்படலாம். இவை கழற்றி வைத்திருக்கக் கூடியவையாக அமைக்கப்படுகின்றன.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**கப்டன் வழுதி / மெல்மன்**
(விக்கிரமசிங்கம் வியோகானந்தராசா)
(அக்கரைப்பற்று, மட் - அம்பாறை)

தமிழீழ மண்ணில்: 5-01-1973
தமிழீழ மண்ணுக்காய்: 11-06-1992

தமிழீழ வளநாட்டின் தனித்த பெருவீரனென
மண்ணுக்காய் உயிர்நீத்த மாவீரா!
பொன்னுக்காய் பொருளுக்காய் பறக்கின்ற வேளைதனில்
எம் மண்ணுக்காய் உயிர்நீத்த மாவீரா!

பொங்கிவரும் கண்ணீரும் புரையோடும் வேதனையும்
தங்கமென நீ வளர்த்த தியாகச் சுடர் கண்டு தணியும்
பொங்கிடும் தாகமும் புரையோடும் வீரமும் வென்றிடும்
தமிழீழம் காண்பாய் வித்தான வீரனன்றோ நீ

இவருடன் வீரச்சாவடைந்த இரண்டு போராளிகளையும் நினைவு கூருகின்றோம்.

உமது துயரில் வாடும்.
அம்மா, சகோதர. சகோதரிகள்,
சித்தப்பா குடும்பத்தினர்.

உடுவில்,
யாழ்ப்பாணம்.

(5048)

# "புகைத்தலின் வரலாறும் - ஆபத்துகளும்"

'புகைத்தல்' அல்லது 'புகைபிடித்தல்' சம்பந்தமான சரித்திர வரலாற்றைப் பார்த்தால் 16ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவைக் கண்டுபிடித்த ஸ்பானியர்கள் அங்கு வாழ்ந்த பழங்குடியினர் ஒரு வகையான இலைகளை குழல் மூலம் புகைத்தலுக்குப் பயன்படுத்தியதைக் கண்டுபிடித்தனர். இவர்கள் இதனை ஐரோப்பிய கண்டத்திற்கு அறிமுகப்படுத்தினர். பின்னர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த கண்டுபிடிப்பாளர்கள் 1558-ல் இதனை இங்கிலாந்து நாட்டுக்கு அறிமுகப்படுத்தினார்கள். இந்த நூற்றாண்டின் முடிவில், இங்கிலாந்து நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் 'புகையிலைக்கு' வருமான வரி விதிக்குமளவுக்கு அதன் அளவு அதிகரித்திருந்தது. அதனைத் தொடர்ந்தது அடுத்த அடுத்த ஆண்டுகளில் புகைப்பிடிக்கும் பழக்கம் உலகம் பூராவும் துரிதகதியில் தொடர்ச்சியாக முன்னேற்றம் கண்டது. இந்தப் புகைத்தலுக்குப் பயன்படுத்தப்படுகின்ற 'இலைகளில்' மனிதனுக்கு ஒருவித போதையை ஏற்படுத்தக் கூடியதும், ஒரு தொடர்ச்சியான பழக்கத்திற்கு அடிமைப் படுத்தக் கூடியதுமான- இரசாயனப் பொருள் இருந்ததைப் பலரும் அறிந்தார்கள். இத்தகைய இரசாயனப் பதார்த்தத்தைக் கொண்ட புகையிலைப் பயிருக்கு ''நிக்கோரினா நபாக்கொம்'' என்ற பெயரிட்டார்கள். புகைப் பிடிக்கும் பழக்கம் இவ்வளவு விரைவாக மனிதரிடையே உலகம் பூராவும் பரவும் என்று யாருமே எதிர் பார்க்கவில்லை.

புகையிலையிலுள்ள இத்தகைய இரசாயனப் பொருளை லிஸ்பன் என்கிற நாட்டில் பிரான்ஸ் தூதுவராக கடமை புரிந்த ஜீன் நிக்கொட் என்பவர் மருத்துவ காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம் எனப் பரிந்துரை செய்தார். பல நோய்களைத் தடுக்கும் வல்லமை இந்தப் பொருளுக்கு உண்டென அவர் அறிவுரை செய்தார். அதனைத் தொடர்ந்து 16ஆம் நூற்றாண்டில் புகைத்தல் வெகு விரைவாக ஐரோப்பாக் கண்டம் முழுவதும் பரவியது. இவருடைய நிக்கொட் என்கிற பெயரையே பின்னர் புகையிலையில் புகைத்தலுக்காகப் பயன்படுத்தப்படும் அந்த இரசாயனப் பொருளுக்கு 'நிக்கோட்டீன்' என்று பெயரிட்டார்கள். ஆனாலும் பின்னர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜேம்ஸ் 1 என்பவரே இவருடைய கூற்றை மிக வன்மையாக மறுத்ததுடன் அதனைக் கண்டிக்கவும் செய்தவராவார்.

## சிகரெட்டின் வரலாறு:

பதினேழாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே ஸ்பெயின் நாட்டில் சிகரெட் முதன் முதலாக தயாரிக்கப்பட்டது. அந்தக்காலத்தில் கிரைமியன் போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இங்கிலாந்து நாட்டு போர் வீரர்களிடம் இந்தப் பழக்கம் ஏற்பட்டு பின்னர் சண்டை முடிந்து அவர்கள் தம் தாய்நாட்டுக்குத் திரும்பியபோதே இங்கிலாந்திற்கு அவர்களால் 'சிகரெட்' அறிமுகப்படுத்தப்பட்டது. 17-ம் நூற்றாண்டின் கடைசிப்பகுதியில் -சிகரெட் குடிப்பது ஒரு நாகரிகத்தின் முன்னேற்றம் என அதுவும் குறிப்பாக சமுதாயத்தின் மேல் மட்டத்தினரிடையே இது வெகுவாகப் பரவியது. ஆனாலும் சாதாரண மனிதர் தொடர்ந்தும் குழல் மூலமே புகை பிடித்தனர். 19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே சுருட்டுப் புகைத்தல் அறிமுகம் செய்யப்பட்டது. ஐரோப்பா கண்டத்தைத் தவிர உலகம் பூராவும் அதுவும் பரவியது. அமெரிக்காவிலுள்ள வேர்ஜினியா மாநிலத்தில் விதமான சிகரெட்டை தயாரிக்கத் தொடங்கிய பின்னரே 19-ம் நூற்றாண்டில் சிகரெட் குடிக்கும் பழக்கம் வெகுவாகப் பிரபல்யமானது. அத்துடன் ஏனைய விதங்களில் புகை பிடித்தவர்களும் சிகரெட்டையே குடிக்க ஆரம்பித்தார்கள். முதலாம் உலக மகாயுத்தம் வரை பெண்கள் புகை பிடிப்பது மிக அரிதாகவே இருந்தது. அதன் பின்னர் படிப்படியாக பெண்களிடம் புகை பிடித்தல் பழக்கம் அதிகரித்தது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் அது மிக வெகுவாக பரவ அதிகரித்தது.

## இலங்கையில் சிகரெட்டின் அறிமுகம்:

16-ம் நூற்றாண்டில் போத்துக்கீசர் இலங்கையைப் பிடித்து ஆண்டபோதே சிகரட் முதன்முதலாக இலங்கையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அதன் பின்னர் இன்று வரை இலங்கையில் சிகரட் குடிக்கும் பழக்கம் தொடர்ச்சியான கதியில் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இலங்கையில் சிகரட்டை உற்பத்தி செய்யும் டுபாக்கோ கொம்பனியின் புள்ளி விபரப்படி 1969-ல் 2,254 மில்லியன்கள் சிகரட்டிலிருந்து மூன்றுவருட இடைவெளியில் 1972-ல் அதன் விற்பனை இலங்கை பூராவும் 3,219 மில்லியன்களாக அதிகரித்துள்ளது. அதாவது 3 வருடத்தில் 42 சதவீதம் அதிகரித்துள்ளது. பின்னர் 1972-ல் இருந்து 1984 வரை அதன் விற்பனை 3,424 மில்லியன்களிலிருந்து 6,000 மில்லியன்கள் வரை அதிகரித்துள்ளது. இந்த 12 வருட கால இடைவெளியில் 72 சத வீதத்தால் அதிகரித்துள்ளது. அத்துடன் ஏறக்குறைய 250 மில்லியன் சிகரட் வரை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. மொத்தத்தில் சிகரட்டிற்காகப் பயன்படுத்தப்பட்ட புகையிலையின் எடை 25 லட்சம் கி. கிராமாகும்.

## பீடி:

1978-ல் 2036.2 மில்லியன்களாக உற்பத்திசெய்யப்பட்ட பீடி, 1979-ல் 2657.5 மில்லியன்களாக அதிகரித்து 1980 இல் அது ஏறக்குறைய 1363.7 மில்லியன்களாகக் குறைந்துள்ளது. ஏறக்குறைய 50 சதவீதம் குறைந்துள்ளது. இலங்கையில் 1970-ல் 30,640 ஏக்கரில் பயிரிடப்பட்ட புகையிலைப் பயிர் 1975-ல் 28,110 ஏக்கரிலும், 1980-ல் 38,780 ஏக்கரிலும், பின்னர் 1984-ல் 33,887 ஏக்கரிலும் பயிரிடப்பட்டது.

## சிகரெட் புகையில் இருப்பது என்ன?

1) நிக்கோட்டீன்: புகைத்தலின்போது ஏறக்குறைய 90 சதவீதமான நிக்கோட்டீன் இரத்தத்துடன் கலக்கின்றது. புகைப்பவருக்கு அருகில் இருப்பவருக்கு 10 வீதம் கலக்கின்றது. நிக்கோட்டீன் மனிதனுடைய இருதயம், இரத்தக் குழாய்கள், உணவுக்கால்வாய், சிறுநீரகங்கள், நரம்புத் தொகுதி என்பவற்றைப்பாதிக்கின்றது.

2) தார் எனப்படுகின்ற பொருளே மனிதரில் புற்று நோயை ஏற்படுத்துகின்றது.

3) எரிச்சலூட்டும் பொருள் இது மனிதனுடைய மூச்சுக் குழாய்களைப் பாதிக்கின்றது.

4) காபன்மொனோ ஒக்சைட்: இதுவும் இருதயத்தைப் பாதிக்கின்றது.

5) கதிர்வீச்சுத்திறன் கொண்ட பொருள்: ஏறக்குறைய 5 சிகரட்டுக்களை ஒரு நாளைக்குக் குடிப்பவர் கிட்டத்தட்ட 300 தடவைகள் நெஞ்சை எக்ஸ்ரே படம் எடுப்பதற்குச் சமமான கதிர்வீச்சுத் தாக்கத்தைப்பெறுகிறார். இதனாலேயே புகைப்பவர்களுக்கு நுரையீரல் புற்றுநோய் அதிக அளவில் ஏற்படுகிறது.

6) ஹைதரஜன் சயனைட், போமால்டிசைட் போன்றவையும் சில சிகரட் வகைகளில் காணப்படுகின்றன.

## புகைத்தலினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள்:

நுரையீரல் புற்றுநோய், தொடர்ச்சியான இருமல், மாரடைப்பு, வயிற்றுப்புண், நாக்கில் புற்றுநோய் மற்றும் இதொண்டை, பித்தப்பை, பன்கிரியஸ் என்பவற்றிலும் புற்றுநோய் ஏற்படும் ஆபத்து இருக்கிறது. புகைத்தலினால் மனிதனுக்கு ஏற்படுகின்ற ஆபத்துக்களை 1938-ல் அமெரிக்காவிலுள்ள ரேய்மண்ட் ரீட் என்பவரே முதன்முதலில் கண்டுபிடித்தவராவார். ஆனாலும் அதனைத் தொடர்ந்து 1950-ல் டொல் என்பவரும், 1956-ல் ஹில் என்பவரும் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் விளைவாகவே நுரையீரலில் புற்றுநோய் ஏற்படுவதைக் கண்டுபிடித்தார்கள். இவர்களே புகைப்பிடித்தலுக்கு எதிரான இயக்கத்தையும் ஆரம்பித்தவர்களாவர். ஒரு சிகரட்டைப் புகைத்து முடிக்கும் போது ஒரு மனிதன் தனது வாழ்வில் ஐந்தரை நிமிடங்களை இழக்கின்றான். மேலும் 20 சிகரட்டுக்களை நாள் ஒன்றுக்குக் குடிப்பவர் தனது வாழ்வில் ஏறக்குறைய ஆறரை வருடங்களை இழக்கின்றார். அமெரிக்காவில் புகைபிடித்தல் சம்பந்தமான வியாதிகளால் ஏறக்குறைய 360,000 பேர் வரை வருடந்தோறும் இறக்கிறார்கள். உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின்படி 90 சதவீதமான நுரையீரல் புற்றுநோய்க்கும், 75 சதவீதமான தொடர்ச்சியான இருமலுக்கும், 25 சதவீத மாரடைப்பிற்கும் புகைத்தலே காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

**- சீர்மாறன் -**

## எரித்திரியா!

முப்பது ஆண்டுகால பிரசவ வேதனைக்குப் பின்னர்  
பூமித்தாய் பெற்றெடுத்த புதிய குழந்தை.  
வீரிய விதை முளைக்கும்போதே நிலத்தை  
கிழித்துவிடுவது போல்.  
உலக அரங்கில் முகம் காட்டியிருக்கும் புதிய தேசம்.  
இருண்ட கண்டத்திலிருந்து ஒரு புதிய நம்பிக்கை  
ஒளிக்கீற்று.  
செங்கடலின் ஓரத்தில் பிறப்பெடுத்திருக்கும் புதிய நாடு.  
பிரசவ வேதனையில் துடிக்கும் எமது தாயகத்திற்கு  
ஒரு சிறப்புமிக்க முன்னுதாரணம்.  
எழுந்து வந்திருக்கும் இளைய தேசம்!  
உனக்கும் எமக்கும் இடையில் தான் எத்தனை ஒற்றுமைகள்.  
இத்தாலியரிடம் நீ இறைமையை இழந்தது போலத்தான்  
நாமும் போர்த்துக்கேயரிடம் அதனைப்  
பறிகொடுக்க நேர்ந்தது.  
ஆட்சி அதிகாரம் எப்படி எப்படியோ கைமாறி  
ஈற்றில் வெள்ளையரிடம்.  
சூரியன் மறையாத அந்தப் பெரும் இராச்சியம்  
உன்னைப்போலவே எம்மையும்  
தனது அடிமையாக்கி இருந்தது.  
வெள்ளையனை விரட்டியடித்து வெளியேற்றியபோது  
உன்னைப்போலவே நாமும் அயல்நாட்டுக் காரரிடம்  
ஆட்சி அதிகார நுகக்கயிற்றை கொடுத்துவிடும்  
அவலம் நேர்ந்து விட்டது.  
அந்நியர் ஏற்படுத்திய பிணைப்பு பிணக்குக்கு  
உரியதான போது பிரிவினைப் போரை நீ தொடக்கினாய்.  
நாமும் அப்படியே.  
நெருப்பாற்றில் நீந்திவந்த நம்பிக்கைச் சுடரே!  
விடுதலைக் கோரிக்கையை உச்சரித்தபோது உதவிக்கு  
வருவதாய் உத்தரவாதம் அளித்த 'தோழர்கள்'  
இடைநடுவில் கைவிட்ட போது  
நீ தளர்ந்துபோய் விடவில்லை.  
துருவக் கரடியின் துரோகத்தனத்தால் நீ  
துவண்டுபோய் விடவில்லை.  
வானத்தில் வட்டமிட்ட கழுகுகளின் நிழலிலும்கூட  
நீ வாழ முடிந்தது அதிசயந்தான்.  
நயவஞ்சகமும், துரோகத்தனங்களும் அலைக்கழித்தபோதும்  
நீ அசைந்து கொடுத்துவிடவில்லை.  
முப்பத்தைந்து இலட்சத்தையும் எண்ணிக்கையில்  
கடந்துவிட்ட மண்ணின் மக்கள் தொகையில்  
பல இலட்சம் பேர் எல்லையைக் கடந்து  
சென்றுவிட்ட போதும்கூட  
நீ கலங்கிப்போகவில்லை.  
யுத்தத்தின் கொடூரத்திற்கு மத்தியில்  
கொடிவரட்சியவாட்டியது.  
பஞ்சமும், பசியும், பட்டினியும் கூட  
பெரிதும்துன்புறுத்தியது.  
ஆனாலும் உனக்கோ சுதந்திரதாகம்  
தணிந்து போய்விடவில்லை.  
எதியோப்பியாவிற்கு அனுப்பும் உப்பையும், சவூதி  
அரேபியாவிற்கு விற்பனை செய்யும் பசுத்தோலையும்  
தவிர என்ன பொருளாதார வளம் உண்டு என்று  
கேள்வி எழுப்பிய 'நிபுணர்களைப்' பார்த்து நீ  
கவலைப்படவில்லை.  
உலகின் வறுமை மலிந்த நாடுகளின் பட்டியலில்  
முக்கிய இடம் பெற்றிருக்கும் உனக்கு  
சுதந்திரம் ஒரு கேடா என்று கேலி பேசியவர்களை நீ  
பொருட்படுத்தவில்லை.  
இவற்றினால்தான் இந்துமா கடலில் இருந்து  
ஒருகலங்கரை விளக்கமாக  
உன்னை நோக்குகின்றோம்.  
முட்டைக்குள் இருக்கும் குஞ்சு ஓட்டை உடைத்  
துக்கொண்டு வெளியேறுவது போல புதுவேகத்  
துடன் புறப்பட்டிருக்கும் புதிய தேசமே!  
உன்னை வாழ்த்துகின்றோம்.  
காலனியாதிக்கம் அகன்ற பின்பு  
எல்லைகளை மாற்றிக்கொள்ளக்கூடாது என்று  
ஆபிரிக்கக் கண்டமேவகுத்திருந்த உடன்பாட்டை  
தகர்த்து எறிந்தது உன் பிறப்பு.  
முட்டைக்குள் இருக்கும்  
வெள்ளைக்கருவும் மஞ்சள் கருவும் தான்  
குஞ்சு பொரிப்பதற்கு ஆதாரம்.  
ஆனாலும் 'அடைகாத்தல்' என்ற  
வெளிப்புற வெப்பமும்,  
அதற்கான காலமும் தேவை.  
உனது பிறப்பும் கூட அதனை  
நன்கு உணர்த்துகின்றது.  
சிவப்பு சாம்ராஜ்யம் சிதைந்த போது  
ஒவ்வொரு துண்டிற்கும் தேசம் என்று உடனடியாகவே  
முத்திரை பொறித்தது உலகம்.  
ஆனால் முப்பது ஆண்டுகாலப் போரின் பின்பு  
நீ முதுகெலும்பை நிமிர்த்திய போதும் கூட  
'ஜனநாயக சோதனை' நடத்த வேண்டும்  
என்று கட்டாயப்படுத்தியது.  
சொந்தப் பலத்தால் தலைநகரம் அஸ்மாராவைக்  
கைப்பற்றிய பின்பும் கூட  
தேசம் என்று அங்கீகாரம் பெற இரண்டாண்டு காலம்  
பொறுமையோடு காத்திருக்கும் நிர்ப்பந்தம்  
உனக்கு நேரிட்டுவிட்டது.  
என்றாலும் அந்தத் தடையையும் கூட நீ  
லாவகமாகக் கடந்து வெற்றிபெற்றாய்.  
தொண்ணூற்று ஒன்பது சதவிகிதம் மக்களுக்கும்  
சுதந்திர தாகம் இருக்கின்றது  
என்பதை தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டினாய்.  
பூமிப் பந்தில் உன் எல்லைக்கோடுகளை சொரிந்த  
குருதியாலும், சிந்திய வியர்வையாலும்,  
பொழிந்த கண்ணீராலும் சேறாக்கிக் காட்டினாய்.  
உலக மன்றத்தில்  
உனக்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்டது.  
அமெரிக்காவும், பிரிட்டனும், பிரான்சும், சீனாவும்  
மற்றும் எதியோப்பியாவும் கைகொடுத்து  
வரவேற்க உலக மன்றத்தில்  
உனது இடம் உறுதிப்படுத்தப்பட்டது.  
புதிய தேசத்தின் பிரசவம் என்பது மண்ணில் நிகழ  
முடியாத மாயாஜாலம் அல்ல என்பதை உனது பிறப்பு  
எமக்கு எடுத்துரைக்கின்றது.  
வாழ்த்துகின்றோம் உனது வெற்றிகளுக்காக  
உலக அரங்கில் எம்மையும் வரவேற்க காத்திருப்பாய்  
என்ற நம்பிக்கையுடன் மீண்டும் வாழ்த்துகின்றோம்.  
வாழ்க பல்லாண்டு!

# திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்க சுதந்திரக் கட்சிக்கு புது உத்வேகம்

இளையவன்

"நான் சிறுமியாக இருந்தபோது நாம் இருந்த இல்லத்திலேயே எமது தந்தை சுட்டுக்கொல்லப்பட்டார். எமது வீட்டில் எனதும் குழந்தைகளதும் முன்னிலையிலேயே எனது கணவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இப்போதும் எனது குழந்தைகள் என்னை அரசியலில் ஈடுபட வேண்டாம் என்றே கோருகின்றனர். கொலைக்கள அரசியலில் இருந்து நாட்டை மீட்க வேண்டும்." இது மாகாண சபை தேர்தலின்பின் சிறிலங்கா அரசியல் தலைமைகளில் குறிப்பிடும்படியான முக்கியத்துவத்தைப்பெற்றுவிட்ட சந்திரிகா குமாரணதுங்காவின் குரல்.

எதிர்க்கட்சி அந்தஸ்தையும் இழந்து மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டு விடலாம் என்றும். தனது அரசியல் வாழ்வைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ள கட்சி தள்ளாடுகிறது என்றும் பரவலாக எதிர்பார்க்கப் பட்ட தொருநிலையில் ஆளும்கட்சிக்கு சவால் விடும் சகதயாக சுதந்திரக்கட்சி புத்துயிர்ப்புபெற்று இருக்கின்றது. கட்சிக்குள் தலைமைத்துவத்திற்கான போட்டி, நாட்டின் எரியும் பிரச்சினைகள் குறித்து கட்சியிடம் தெளிவான சிந்தனைப் போக்குகள் இல்லை. ஆளுங் கட்சியின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு முகம் கொடுத்து மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற முடியுமா என்ற சந்தேகம், நீண்ட காலமாக எதிர்க்கட்சியாகவே இருந்தமையால் ஆட்சிபீடம் ஏறலாம் என்பது வெறும் கனவாகிப் போய்விடுமோ என்ற கட்சித் தொண்டர்களின் அச்சம். இவ்வாறான பலவற்றிற்கும் மத்தியில் சிறிலங்கா சுதந்தரக் கட்சி புத்துயிர்ப்பு பெற்றிருக்கிறது. இதற்கு திருமதி சந்திரிகாவின் புது வரவு குறிப்பிடத்தக்க அளவில் பங்காற்றியுள்ளது என்பதில் ஐயம் கொள்ள வேண்டியிருக்காது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி லலித அத்துலத்முதலியையும், ஐக்கியதேசியக் கட்சி பிரேமதாசாவையும் இழந்தமையால் ஏற்பட்ட வெற்றிடங்கள் சுதந்திரக் கட்சிக்கும் திருமதி சந்திரிகாவுக்கும் துணைசெய்துள்ளன என்பதையும் மறுபபதற்கில்லை. அரசியல் அரங்கில் எதிரும்புதிருமாக செயற்பட்டாலும் இவ் இருவரும் சுதந்திரக் கடசியின் சிதைவுக்கும் தோல்விக்கும் கடந்த காலத்தில் பெரும் காரணமாக இருந்துள்ளனர் என்பது வெள்ளிடை மலை. லலித் அத்துலத் முதலியையும் பிரேமதாசாவையும் இழந்ததால்அந்தந்தக் கட்சிகள் தமது தலைமைத்துவத்தில் தடுமாற்றத்திற்கு உள்ளான போது அநத சந்தர்ப்பம் சுதந்திரக கடசி தலமையிலான கூட்டணிக்கு வாய்ப்பு அளித்தது என்பது உண்மையே. ஆனாலும் கட்சிக்குள் தன்னை நிலைநிறுத்தவும், மக்கள் அரங்கில் தனது செல்வாக்கை எடுத்துக் காட்டவும் திருமதி சந்தரிகாவிற்கு இந்தமாகாண சபைத் தேர்தல்கள் நல்ல களமாக அமைந்து போய்விட்டது

சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறியதிரைப்படநடிகர் விஜயகுமாரணதுங்க சிறிலங்கா மக்கள் கட்சியை தாபிப்பதற்கும் அரசியல் அரங்கில் அககட்சி தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கும் உந்து சக்தியாகவும், ஊக்க விசையாகவும் விளங்கியவர் திருமதி சந்திரிகா என்பது தெரிந்ததே. இடது சாரி சக்திகளோடு இணக்கப்பாடு, இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப் போராளிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை, மேற்குலக பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிர்ப்பு இந்தியாவுடன் ஒத்திசைவான போக்கு என்றவாறாக விஜயகுமாரணதுங்கவின் அரசியல் கொள்கைகள் வடிவமைக்கப்படுவதில் திருமதி சந்திரிகா ஒரு சிற்பியாகச் செயற்பட்டார் என்றே கூறப்படுகின்றது.

விஜயகுமாரணதுங்கவும் அவரைச் சார்ந்தோரும் கட்சியிலிருந்து வெளியேறிய நிலையில் கட்சிக்குள் அநுரா பண்டாரநாயக்கவின் செல்வாக்கு மேலோங்கியிருந்தது. கட்சித் தலைவியான திருமதி சிறிமாவோவின் குடியியல் உரிமை பறிக்கப்பட்டும், கட்சிக்கு எதிரான பல்வேறு செயல்கள் மேற் கொள்ளப்பட்டபோதும் கூட ஐக்கியதேசியக்கட்சியுடன் ஒரு மிதமான அணுகுமுறையையே கொண்டிருந்தார். ஐ. தே.கவின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக பெரும்பாலும் உடன்பாடான கருத்துக்களையே கொண்டிருந்த அநுரா ஐ.தே.கவின் கைபொமமையாகவே கட்சிக்குள் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டுக்கள் கூட மேலெழுந்தன. ஐ தே கவின் முக்கியஸ்தர்கள் சிலரால் விலைக்கு வாங்கப்பட்ட ஒருவராகஅநுராவிளங்கினார் என்றும் கூறப்பட்டதுண்டு.

## சந்திரிகாவின் சந்தர்ப்பவாதம்

விஜயகுமாரணதுங்க சுட்டுக்கொல்லப்பட்டதை தொடர்ந்து அவரது பிரேதப் பெட்டியின் மீது கை வைத்து ஐக்கிய சோசலிசக் கூட்டணியைக் காப்போம் என்று சத்தியப்பிரமாணம் செய்தவர்களில் திருமதி சந்திரிகாவும் ஒருவராவார். ஆனால் சில மாதங்களிலேயே கட்சியின் தலமைப் பதவியை ஓசி அபய குணசேகராவிடம் ஒப்படைத்து அரசியலிலிருந்து ஒதுங்கி லண்டன்வரை சென்றார். அவர் மீண்டும் நாட்டுக்கு திரும்பி வந்த போது மக்கள் கடசி ஓஸி பிரிவு என்றும், வை. பி. டி சில்வாபிரிவு என்றும் பிளவுபட்டிருந்தது. நவ சமசமாஜக் கடசியும, கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும், சிறிலங்கா மக்கள் கட்சியும் இணைந்து உருவாக்கிய ஐக்கிய சோசலிசக் கூட்டணி இறுதி மூச்சுக்களை விட்டுக் கொண்டிருந்தது. சுதந்திரக் கடசியின்பரம வைரியான ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து காமினி, லலித் குழுவினர் வெளியேற்றப்பட்டிருந்தனர்.

இந்தச் சூழ்நிலையில்தான் நாடடுக்குத் திரும்பிய திருமதி சந்திரிகா சுதந்திரக் கடசிக்கு புதுவரவு ஆனார். கட்சியின் தலமைபபதவியைக்கைப்பற்றுவதிலேயே அநுரா குறியாக இருக்க கிராமிய மட்டச் செல்வாக்கை உறுதிப்படுத்திக் கொள்வதில் திருமதி சந்திரிகா கவனம் செலுத்தினார். கம்பகா மாவட்டத்தின் அமைப்பாளராகத் திருமதி சந்திரிகா நியமிக்கப்பட்டபோது துள்ளிக் குதித்த அநுராவின் ஆதரவாளர்கள் காலப்போக்கில் அடக்கப்பட்டனர் அல்லது கவரப்பட்டனர்.

லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, சிறிலங்கா மக்கள் கட்சி [வை. பி. டி. சில்வா அணி], ஜனதா விமுக்தி பெரமுன எனபனவற்றை சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைத்துப் பொதுமக்கள் கூட்டணி என்ற புதிய கூட்டணி தோன்றுவதற்குத் திருமதி சந்திரிகா மூல காரணமானார். சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணி மேல் மாகாண சபையில் 43 ஆசனங்களைப் பெற்றபோது ஆகக் கூடுதலான விருப்புவாக்குகளைப் பெற்று திருமதி சந்திரிகா மேல் மாகாண முதல் வரானார்.

திருமதி சந்திரிகாவின் அரசியல் பிரவேசம் காரணமாக அதிருப்தியுற்ற அநுரா குழுவினர், அவருக்கும் அவரது குழுவினருக்கும் எதிராகப் பல நடவடிக்கைகளைமேற்கொண்டனர். பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷாவினால் ஒழுங்கு செய்யப்பட்ட பாதயாத்திரையின்போது திருமதி சந்திரிகா அவமானப் படுத்தப்பட்டதாகக் கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டதும் இங்கு சுட்டிக் காட்டப்படத் தக்கதாகும். லேக் ஹவுஸ் பத்திரிகைகளும் அரசாங்க சார்பு ஏடுகளும் திறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவப் போட்டி மற்றும் உட்கட்சிப் பூசல்களைப் பெரிதுபடுத்திக் காட்டிக் கொண்டிருந்த சூழ்நிலையில் தான் திருமதி சநதிரிகா முன்னேற்றப் பாதையில் வீறு நடை போடுகின்றார்.

சுதந்திரக் கட்சிக்குத் தெளிவான கொள்கையும் திடமான தலைமையும் தேவை என்று வற்புறுத்தியிருக்கும் திருமதி சந்திரிகா அதனை நோக்கிய திசையில் நகரத் தொடங்கியிருக்கின்றார் என்பதை அண்மைய நடப்புக்கள் எடுத்துக் காட்டுகின்றன. இவற்றில் குறிபபிடக் கூடியது ஹெல உறுமய குழுவினருக்கு எதிரான நடவடிக்கைகள் ஆகும். இனப்பிரச்சினைத் தீர்வுக்கா... அமைச்சர் தொண்டமான் முன்வைத்த தீர்வுத் திட்டத்தை எதிர்த்துக் கொண்டு, வெளிப்படையாகவே இனவாத அரசியல் பிரசாரத்தை மேற்கொண்ட ஹெல உறுமய குழுவினர் மீது கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. ஹெல உறுமயவின் ஸ்தாபகரான திலக கருணாரத்னா கட்சியிருந்து நீக்கப்பட்டிருப்பதுடன் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்படவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் ஹெல உறுமய குழுவின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டாம் என்று கடசியின் பாராளுமன்ற உறுப்பினர்களும், அங்கத்தவர்களும், ஆதரவாளர்களும் உத்தியோக பூர்வமாகவே அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதாரத் திட்டங்களுக்கு ஆதரவு காட்டும் அநுராவின் அணுகுமுறைக்குப் புறம்பாக இடதுசாரி மற்றும் முற்போக்குச் சக்திகளுடன் சுதந்திரக் கட்சி நெருக்கமாகி வருகின்றது. எனவே சுதந்திரக் கட்சி ஒரு புதிய திசையில் நகரத் தொடங்குகின்றது எனலாம்.

ஆனால் சுதந்திரக் கட்சி தமிழர்களின் நம்பிக்கையைப் பெறுவதற்குஇன்னமும் நீண்ட தூரம் முன்னேற வேண்டியிருக்கும். இனப்பிரச்சினைக்காக அவர்கள் முன்வைக்கப் போகும் தீர்வு என்ன? அது தமிழர்களுக்கு எந்தளவிற்கு ஏற்புடையதாக இருக்கும் என்பதைப் பொறுத்தே சுதந்திரக் கட்சி தனது எதிர்காலத்தைத் திட்டமிடுதல் பொருத்தப்பாடாக இருக்கும் என்பதை மட்டும் இப்போதுகூற முடியும்.

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

**வாக்காளர் பட்டியல்**

**31-3-93**

எமது சங்கத்தின் 31-3-93 வரையிலான வாக்காளர் பட்டியல்

கிளை 1, 2 ற் குரியவை -நிவாரணக்கிளை. 1லும்
கிளை 9, 10, 12 ற்குரியவை -நிவாரணக்கிளை. 2லும்
கிளை 8, 11 -நிவாரணக்கிளை. 3லும்

அங்கத்தவர் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இதில் ஏதும் ஆட்சேபனைகள் இருப்பின் 21-6-93ந்திகதிக்கு முன்எழுத்துமூலம், "செயலாளர், ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம், பி. எஸ். சேவிஸ் நிலையம், யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

செயலாளர். (சி/6814) தலைவர்.

**யாழ். மாணவர்கட்கு நற்செய்தி**

கம்பியூட்டர் யுகத்தில் பிரவேசித்து சர்வதேச சமூகத்துடன் இணைந்துகொள்ள அரிய வாய்ப்பு.
'உங்களுக்கென ஆரம்பிக்கப்படவுள்ள கம்பியூட்டர் பயிற்சி வகுப்புக்கள்

**INTRODUCTION TO COMPUTER AND BASIC LANGUAGE**

(3 மாத கால பயிற்சி நெறி)

ஆரம்பம் : 14-06-1993

- ★ வகுப்புக்கள் திங்கள், புதன், வெள்ளி (3 00 — 4.30) p. m.
- ★ ஆண்டு 10, O/L, A/L மாணவர்கட்கு ஆன பயிற்சி.
- ★ இலகு பயிற்சி நெறி, தமிழ் விளக்கத்துடன் கூடியது.
- ★ கட்டணம் தவணை முறையில்.
- ★ கூடிய செய்முறைப் பயிற்சி, பெறுமதி மிக்க சான்றிதழ்.

விபரங்கட்கு :

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
(சி-6792) 14 St. PETER'S LANE, JAFFNA.

**அரசாங்க அறிவித்தல்**

சுகாதார திணைக்களம், பகிரங்க ஏலவிற்பனை

**பிளாஸ்டிக் வெற்றுப் பீப்பா**

எமது பணிமனையில் உள்ள சுமார் 100 லீற்றர் கொள்ளக்கூடிய வெற்றுப் பீப்பாக்கள் எதிர்வரும் 18-06-93-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 09-30 மணியளவில் ஐந்து பகுதிகளாக பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். ஏலவிற்பனையில் பீப்பாக்களைப் பெறுபவர் உடனே பணத்தைச் செலுத்திப் பீப்பாக்களை அப்புறப்படுத்த வேண்டும். பீப்பாக்களைப் பார்க்க விரும்புவோர் 15-06-93ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

வைத்திய கலாநிதி பொ. இரத்தினசபாபதி
பிராந்திய பணிப்பாளர்.
சுகாதார சேவைகள் பிராந்திய
பணிப்பாளர் பணிமனை,
59, விக்ரோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-6810) 9-6--93.

# இரண்டாவது ஈழப்போரின் நான்காவது ஆண்டு

**நிலாந்தன்**

கடந்த வெள்ளிக்கிழமை பொசன் நோன்மதி தினத்திலன்று, பலாலி விமானத் தளத்தில் உள்ள பன்சலையில் சமயச் சடங்குகள் நடைபெற்றன. முகாமின் கட்டளையிடும் தளபதி கேணல் பியசோம நிகழ்ச்சிகளுக்குத் தலைமைதாங்கினார். லான்ஸ்கோப்ரல் குலதுங்க நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார். பெருமளவு படையாட்களும், ஒருதொகை பிக்குகளும் இதில் கலந்து கொண்டார்கள்.

போதி பூசையின்பின் அங்கு ஒரு பிக்கு உரையாற்றினார். உரையின் ஆரம்பத்தில் அவர், உயிர்நீத்த தளபதி கொப்பேகடுவவும் உட்பட ஏனைய படையாட்களுக்குத் தெய்வ ஆசிவேண்டிப் பிரார்த்தித்தார் கொப்பேகடுவ மீண்டும் ஒரு சிங்களவனாகவே பிறப்பார் என்றும், அவர் பௌத்தத்தை இத்தீவு முழுவதும் பரப்பும் பணியில் சிங்களவர்களோடு கைகோர்த்துச் செயற்படுவார் என்றும் அவர் சொன்னார். புத்தபகவான் இத்தீவு ஒரு பௌத்த தீவாக மாறவேண்டும் என்று விரும்பினார் என்றும், அதன்பொருட்டாகவே மகிந்தர் இங்கு வந்தார் என்றும் மேலும் அந்தப் பிக்கு சொன்னார்.

துட்டகெமுனுதான் இங்கு பௌத்தத்தை மீள நிறுவியவன் என்று சிங்களவர் கருதுவது தவறு என்பதைச் சுட்டிக்காட்டிய அவர்; துட்டகெமுனுவின் தந்தை காக்கவண்ணதீசன் காலத்திலேயே யுத்த தயாரிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்றும், காக்கவண்ணதீசன் படையணிகளைப் பெருக்கியும், உணவுப்பொருள்களைச்சேமித்தும் வைத்திருந்தான் என்றும் சொன்னார்.

இன்றுமுன்னணிக்காவலரண்களில் பலவிதமான துயரங்களுக்கும் சன்னங்களுக்கும் நடுவில் படையாட்களும், கேணல் பியசோமவும் போராடிக்கொண்டிருப்பதும், தீவு முழுவதும் பௌத்தத்தைப்பாதுகாக்கவும் விஸ்தரிக்கவுமே என்றும் அவர் தொடர்ந்து சொன்னார். காக்கவண்ணதீசனும், துட்டகெமுனுவும் இத்தீவில் பௌத்தமும், சிங்களமும் பேராபத்துக்குள்ளாகியிருந்த ஒரு தருணத்தில் அந்த ஆபத்துக்களை எதிர்த்துப் போராடியவர்கள் என்றும் கூறிய அவர், அதுபோலவே இன்றும் பௌத்தத்திற்கு நெருக்கடியும், ஆபத்தும் உண்டாகியிருப்பதாகவும் இவற்றைஎதிர்த்துப் போராடிவரும் பலாலி விமானத்தளத்திலுள்ள படையாட்களுக்கும், கேணல் பியசோமவிற்கும் புத்தபகவானினதும், பிறதெய்வங்களினதும் ஆசிகள் கிடைக்கும் என்றும் கூறி தனது உரையை முடித்தார்...

இது நடந்து சரியாக ஐந்து நாட்களின் பின் பிறதேச ஆயர்கள், துறவிகள், பிக்குகள் அடங்கிய சமாதானத் தூதுக்குழு ஒன்று பலாலி விமானத் தளத்தில் வந்திறங்கியது. அங்கிருந்து பருத்தித்துறை துறைமுகத்திற்கூடாக அவர்கள் யாழ்ப்பாணத்திற்குள் பிரவேசித்தார்கள்.

மக்களின் கருத்தை அறிவதுதான் சமாதானத்தை உருவாக்குவதற்குரிய முன்முயற்சி என்று அவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் சமாதானம் இப்பொழுது கற்பனைகளைத் தூண்டுமொன்றாகக்கூட இல்லை.

மூன்றாண்டுகால முற்றுகை; பொருளாதாரத் தடை; தமது சேமிப்புக்கள் ஒவ்வொன்றாகக் கரைந்துசென்றபோதிலும் யுத்தத்திற்கு இசைவாக்கப்பட்டுவிட்ட மக்கள்.

அவர்களை இனி வதந்திளால் மயக்க முடியாது.

இரண்டாவது ஈழப்போர் தொடங்கி, இன்றோடு மூன்றாண்டுகள் முடிகின்றன.

சிங்களவர்கள், ஈழப்போரில் அதிகம் இழப்புக்களைச் சந்தித்ததென்பது கடந்த மூன்றாண்டுகளிலும் தான்.

இரண்டாவது ஈழப்போர் அவர்களுடைய கவர்ச்சியான தளபதிகளை பலியெடுத்து விட்டது.

ராணுவ உயர் பீடம் ஸ்திரமிழந்தது.

தளபதிகள் குழுக்களாகப் பிரிந்து ஒருவர் மற்றவரின் போர்த்திட்டங்களை விமர்சித்தார்கள் அல்லது, விருப்பமின்றி ஒத்துழைத்தார்கள்.

படையாட்களோ, அநேகமாக விடுமுறையிற் செல்லும்போது அப்படியே ஓடிப்போனார்கள்.

தவிர, யுத்தத்தின் தர்க்கபூர்வ வளர்ச்சியானது சிங்களவர்களின் தலைவர்களையும் யுத்த மந்திரிகளையும் கொன்றிருக்கிறது.

முன்பு ஜே.வி.பி. போராளியாகஇருந்தவரும்இப்பொழுது கொழும்பு பல்கலைக் கழகத்தில் அரசறிவியல் விரிவுரையாளராக இருப்பவருமான ஜெயதேவ உயாங்கொட ஒரு சந்தர்ப்பத்தில் கேட்டிருந்தது போல, ஈழப்போர் சிங்களவர்களின் அரசியலை எப்பொழுதோ தீர்மானிக்கத் தொடங்கி விட்டது.

ஆனால் கொழும்பிலிருப்பவர்கள் முன்சொன்ன பிக்குவைப் போலவும், கேணல் பியசோமவைப் போலவும் தான் சிந்திக்கிறார்கள். அவர்களுடைய அரசியலிற்கு ''கொப்பேகடுவவின் ஆவி'' தேவைப்படுகிறது. தமிழர்களை முறியடிப்பதிலிருந்து அவர்கள் சமாதானத்தை ஆரம்பிக்க நினைக்கிறார்கள். தங்களால் தமிழர்களை வெல்லமுடியாது எனக் கண்டால் ''எந்தப் பேயுடனும்'' கூட்டுச்சேர அவர்கள் தயார்.

ஜெயவர்த்தன இதுபற்றித் தெளிவாகக் கூறியிருக்கிறார். சமீபத்தில் ''இந்து'' ராம் அவரை நேர்கண்ட போது தன்னுடைய சமாதானம் [யூலை உடன்படிக்கை] புலிகளைத் தோற்கடிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்ததை அவர் பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கிறார். யூலை உடன்படிக்கையானது யுத்தத்தை சிங்களவர்களிடமிருந்து இந்தியர்களிடம் கைமாற்றும் நோக்கிலானது என்பது அவரது பதில்களிற்கூடாகத் தொனிக்கிறது.

தங்களால் வெல்ல முடியாத புலிகளை இந்தியர்களோடு மோதவிடுவதைத்தான் அவர்கள் சமாதானம் என்று அழைத்திருக்கிறார்கள்.

சமாதானத்தையும் அவர்கள் யுத்தத்தின் மொழிக்கூடாகத்தான் சிந்தித்து வந்திருக்கிறார்கள்.

இந்த ஆண்டில் வான்படையின்பலம் மிக அதிகரித்திருக்கிறது. மிகையொலி வேக விமானங்கள், புக்காரா குண்டுவீச்சு விமானங்கள் யுத்த அரங்கினுள் வந்துவிட்டன. பருவப்பெயர்ச்சிக் காற்றின் எழுச்சியோடு தோன்றும் சாதகமான புவியியல் நிலைமைகளைப் பயன்படுத்தி ராணுவம் புதிய நகர்வுகளிற்கு முயலலாம். ஜனாதிபதி விஜயதுங்க முதலில் ராணுவத்தைமறுசீரமைப்பதில் அக்கறையோடிருப்பது போற் தெரிகிறது. ஜெனரல் சேபால ஆட்டிக்கல திரும்பவும் யுத்த அரங்கிற்குள் கொண்டுவரப்பட்டிருக்கிறார். எனினும் தளபதிகள் முன்பிருந்த முரண்பாடுகளுடன்தான் தொடர்ந்தும் காணப்படுகிறார்கள்.

ஜெனரல் ஆட்டிக்கல இப்பொழுது படைத்துறை உயர்பீடத்தில் காணப்படும் மிக மூத்ததளபதி, ஒரு ராஜதந்திரி, இலங்கைத்தீவின் மிகச் சிக்கலான, நெருக்கடியான, தீர்மானகரமான ஒரு காலப்பகுதியில் அவர் படைத்துறைச் செயலராயிருந்தார். இக்காலப் பகுதியில் தான் ஈழப்போர் பற்றிய இரு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

ஒன்று ஒப்பரேஷன் லிபரேஷன், இது ஜெயவர்த்தனவின் காலம். மற்றது ஐ.பி.கே. எவ்.ஐ. திருப்பி அனுப்பியது, இது பிரேமதாசாவின் காலம்.

ஐ.பி.கே. எவ்.ஐ திருப்பி அனுப்பும் பிரேமதாஸவின் முடிவுக்கு ஆட்டிக்கல முழு ஆதரவு தந்தார். புலிகளுடனும் அவர் தனிப்பட்ட நட்பை ஏற்படுத்த முயற்சித்ததாகவும் கூறப்படுகிறது. மேற்கத்தய கல்விமுறைகளிற்கூடாக வந்தவர் என்பதால் ஒரே சமயத்தில் ஒரு ராஜதந்திரிபோலவும், ஒரு தளபதிபோலவும் இருக்க அவரால் முடியும் என்பதை அவதானிகள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

மறுபடியும், மிகநெருக்கடியான, தீர்மானகரமான ஒரு காலத்தில் முடிவுகளை எடுக்கும் அல்லது முடிவுகளை எடுப்பவர்களிற்கு ஆலோசனைகள் கூறும் ஒரு ஸ்தானத்தில்அவர் அமர்த்தப்பட்டிருக்கிறார்.

முதலில் அவர் தளபதிகளிற்கிடையிலான முரண்பாடுகளைச் சரிசெய்ய வேண்டியிருக்கும். பிறகு ராணுவத்திலிருந்து விலகி ஓடும் படையாட்களின் எண்ணிக்கையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தாக வேண்டும். இறுதியாக, வான்படையின் புதிய பலத்தை நம்பி யாழ்ப்பாணத்துக்கான சமரிற்குரிய நாளைக் குறிக்க வேண்டியிருக்கும்.

ஒரு தீர்மானகரமான சமர் என்று வந்துவிட்டால் தளபதிகள் தவிர்க்கவியலாதபடி ஒற்றுமைப்பட்டேயாக வேண்டும். அத்தகைய ஒரு சமரின் பொலிவான வெற்றியே படையாட்களின் சிதைந்து போயிருக்கும் மன உறுதியை மீளக் கட்டியெழுப்ப உதவும் என்பதில் அவர்கள் உறுதியாயிருக்கிறார்கள். அவர்களுடைய பிக்குகள், புத்திஜீவிகள், பத்திரிகையாளர்கள் அப்படித்தான் கூறிவருகிறார்கள்.

சில உயாங்கொட போன்ற புத்திஜீவிகள் தான் உண்மையை அதன் பயங்கரத்தோடு புரியத் தொடங்கியிருக்கிறார்கள். சிங்களவர்கள் ஈழப்போரின் கதியைத் தீர்மானித்த காலம் போய், ஈழப்போர் சிங்களவரின் கதியைத் தீர்மானிக்கும்காலம்உருவாகியிருப்பதை.

# “அரசியல் தீர்விற்கான அடிப்படையை உருவாக்குவதே எமது நோக்கம்”

நேற்றுக்காலை 10.30மணியளவில்யாழ்.மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் வெளிநாட்டு சர்வமத நல்லெண்ணக் குழுவினர் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் எமது செய்தியாளருக்கு வழங்கிய பதில்களை இங்கு தருகிறோம்.

இச்சந்திப்பில் வெளிநாட்டு நல்லெண்ணக்குழுவின் செடக் அமைப்பு பிரதிநிதி ஜோ வில்லியம்ஸ், தாய்லாந்து தேரர் சொம்சை குசலிசிற்றோ, பிலிப்பைன்ஸ் ஆயர் பியூப்பிலஸ், மலேசிய ஆயர் ஏ. செல்வநாயகம், கரோலியன்ஸ் பிறிஸ் (புருணை) ஆகியோர் கலந்து கொண்டனர்.

கேள்வி: தற்போதைய யாழ் விஜயத்தின் பின் நீங்கள் என்ன செய்ய உத்தேசித்துள்ளீர்கள்?

ஜோவில்லியம்ஸ் (செடக்): யாழ்ப்பாணம் வந்துள்ள வெளிநாட்டு நல்லெண்ணக் குழு மடு, கிளிநொச்சி, திருமலை, கல்முனை மற்றும் அம்பாறை ஆகிய இடங்களுக்கு விஜயம் மேற்கொண்டு அறிக்கை ஒன்றைதயாரிக்கும். இது கொழும்பிலுள்ள சர்வமத மத்திய குழுவிடம் சமர்ப்பிக்கப்படும். சர்வமத மத்தியகுழு இந்த பரிந்துரையின் அடிப்படையில் நீண்டகால சமாதானத்திட்டத்தை தயாரிக்கும்.

கேள்வி: சமாதானத்தைஎட்டுவதற்கு நீங்கள் எடுத்துள்ள முயற்சிகள் என்ன?

ஜோவில்லியம்ஸ்: எமதுகுழு யாழ்ப்பாணத்தில் பல இடங்களை பார்வையிட்டு பலரைச் சந்தித்து பலரது அபிப்பிராயங்களையும் அறிந்துள்ளோம். சமாதானத்திற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதே எம் நோக்கம். சர்வமத மத்திய குழு இதற்கான ஒருபூர்வாங்க திட்டத்தை தயாரித்து உதவும். இறுதியாக மக்களே சமாதானத்திற்கானதீர்வை எட்ட வேண்டும். சமாதானத்திற்கான இறுதி நடவடிக்கைகளை எம்மால் எடுக்க முடியாது. விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் மற்றவர்களும் பேசுவதன் மூலம்தான் நிலையான சமாதானத்தை எட்ட முடியும். நாம் இதில் மூன்றாம் தரப்பினரே.

கேள்வி: மடுவிலும், மன்னாரிலும் சமாதான வலையங்களை எவ்வாறு அமைக்கப்போகின்றீர்கள்?

ஆண்டகை பியூப்பிலஸ் (பிலிப்பைன்ஸ்): எமக்குஇது பற்றிய சில திட்டங்கள் இருக்கின்றது. இந்த இரு இடங்களையும் நாம் பார்வையிட்டு அங்குவாழும் மக்களுடன் பேச வேண்டும். சமாதான வலையம் குறித்து சிறிலங்கா அரசுடனும் பேச்சு நடத்த வேண்டியுள்ளது. சமாதான வலையங்கள் சமாதானத்திற்கான முன்னேற்பாடாக அமையும். சிங்களவரும் தமிழரும் புரிந்துணர்வு இல்லாமல் இருக்கின்றனர். இதைக்களைய எப்படியாயினும் மூன்றாம் தரப்பினராகிய நாம் ஊக்குவிப்பை வழங்க வேண்டும். வீண் உயிரிழப்பை சந்திக்காது மனிதனின் புனிதமான உரிமையாகும். கௌரவமாக வாழவும் வேண்டும் எனது மறைமாவட்டத்தில்[மின்றோனா] முஸ்லிம்கள் அரசுக்கெதிராக போராடுகின்றனர். இங்கு ஒரு சமாதான வலையம் செயற்படுகிறது.

கேள்வி: யாழ்ப்பாணத்தில் பேசும்போது இனப்பிரச்சினைக்கு சமய அடிப்படையிலான தீர்வை எட்டலாம் என நீங்கள் கூறியுள்ளீர்களா? அனைவரும் அரசியல் தீர்வையே விரும்புகின்றனர்.

பியூப்பிலஸ்: சர்வசமய குழு தீர்வு முறையானது மக்களின் மனப்போக்கை மாற்றுவதற்கான முயற்சியாகும். இம்முயற்சியின் முடிவு அரசியல் தீர்வாகவே இருக்கும். மனதில் மாற்றம் ஏற்படாது அரசியல் தீர்வு ஏற்படுமா......

மேதகு அன்டன் செல்வநாயகம் (மலேசியா): சமய அணுகுமுறை மதமாற்றம் என்ற கருத்தில் எடுக்கக் கூடாது. ஒரு சமயத்திலிருந்து மற்றைய சமயத்திற்கு மாற்றுவது இதன் கருத்தல்ல. மக்களின் உண்மைக்கான மனமாற்றத்தையே கூறுகிறோம். நாம் இங்கு அரசியல் தீர்வு ஏற்படுத்த வரவில்லை. அதற்கான அடிப்படையையே தோற்றுவிக்க வந்துள்ளோம்.

**மதன்**

கேள்வி: கொழும்பில் நீங்கள் மல்வத்தை அஸ்கிரிய பீடாதிபதிகளை சந்தித்தீர்களா? அவர்களின் கருத்து என்ன?

ஜோவில்லியம்ஸ் (செடக்): நாம் செடக் அமைப்பின் சார்பில்பலரை சந்தித்துள்ளோம். கொழும்பு மேயர் மற்றும் 30 பௌத்த பிக்குகளை சந்தித்தோம். மற்றும் திருச்சபை அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளைசந்தித்தோம். எதிர்க்

(2ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய தராதர ஆங்கில பரீட்சை ஜூலையில்

(கொழும்பு)

தேசிய தராதரப்பத்திர ஆங்கில பரீட்சை 1993 பகுதி ஒன்றுக்கான எழுத்துப் பரீட்சைவரும் ஜூலை 31 இல் நடைபெறவுள்ளது. இப் பரீட்சைக்கான பரீட்சை நிலையமொன்று யாழ்ப்பாணத்திலும் அமைக்கப்படும் என்று பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது.

வரும் ஜூன் 29ஆம் திகதி வரை பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பரீட்சைத்திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும். உரிய முறையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் காலதாமதமாகி வரும விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிக்கூடம் மற்றும் பல்கலைக் கழக மாணவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம். வயது ஒரு தடையாக இருக்காது. எவ்விதக் கற்கை நெறியைப் பின்பற்றாதவர்களும் விண்ணப்பிக்கலாம். பரீட்சைக் கட்டணம் ரூபா 125/- ஆகும்.

விபரங்களை ஈழநாதம் பணிமனையில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

# வீரவணக்க கூட்டம்

6-ஆம் மாதங்களில் (ஜூன் மாதம்) வீரச்சாவடைந்த வடமராட்சிக் கோட்டத்தின் பருத்தித்துறை வட்டத்திற்குட்பட்ட கடற்புலிகள் அல்லாத பிரதேசத்தின் மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்றுஇரவு 8.00மணிக்கு புலோலி கிழக்கு பூட்டனைப் பிள்ளையார் கோவிலடியில் நடைபெறும். (90)

# மேஜர் கந்தனின் முதலாவது ஆண்டு நினைவு

[நமது நிருபர்]

மேஜர் கந்தனின் முதலாம் ஆண்டு நினைவு நாளான நேற்று முன்தினம் அவரது சொந்த இடமான ஆலங்கேணியில் நினைவஞ்சலிக் கூட்டமும் திருவுருவப்பட திரைநீக்க நிகழ்வும் இடம் பெற்றது.

மேஜர் கந்தன் பாடசாலை முன்றலில் நடைபெற்ற மேற்படி நிகழ்வுகளின்போது தந்தை திரு. நாகேந்திரம் அவர்கள் மேஜர் கந்தனின் உருவப்படத்தைத் திரைநீக்கம் செய்துவைத்தார். வட்டப் பொறுப்பாளர் திரு. மதன்ராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மேஜர் கந்தனின் இளமைக் கால ஆசிரியர் பொன். தில்லைநாதர் நினைவுரையாற்றுகையில் பாடசாலை வாழ்வில் சிறந்த மாணவனாக விளங்கியவர் பின் வீரதீரம் நிறைந்த போராட்டத்தில் இணைந்து பல தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்தி தன் வீரதீரத்தை நாடறியச் செய்தான்' அவன் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் என்றார்.

தொடர்ந்து சாமிபுல் பாடசாலை அதிபர் உரை நிகழ்த்துகையில்; நாம் மாவீரர்களுக்கு மதிப்பு கொடுப்பதை போல அவர்களின் பெற்றோர்களையும் போற்ற வேண்டும் என்றார். நிகழ்வின் இறுதியில் ''போராட்ட களத்தில் மேஜர் கந்தன்'' என்ற கவிதையை பாடசாலை மாணவி ஒருவர் வாசித்தார்.

# வெளிச்சம் ஆனி இதழ் இன்று வெளியாகிறது

விடுதலைப் புலிகள் கலை. பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' (கலை, இலக்கிய சமூக இதழ்) ஆனிமாத இதழ் இன்று வெளிவருகின்றது. இந்த இதழில் ''ஜூலை-5'' கரும்புலிகள் நாளையொட்டிய 'மாலிகா' வின் கவிதையும் தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் அவர்களின் ''தேசிய உருவாக்கத்துக்கு செழுமையும் முழுமையும் கொடுப்பவர்கள் கலைஞர்கள்'' என்ற செய்தியும் இடம் பெற்றுள்ளன. அத்துடன் நா. பாஸ்கரன், த. கலாமணி, இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் ஆகியோரின் சிறுகதைகளும், சோ. ப. மொழிபெயர்த்த 'சுன் - லி' (Sun-Lee) யின் சிறுகதையும், கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் 'கரும்புலிகள் நினைவாக ஒரு பாடலும்' கருணாகரனின் கவிதையும், 'போராளிகளின் பேனாவிலிருந்து' பகுதியில் உதயலட்சுமி, கோளாவிலூர் கிங்ஸ்லி ஆகியோரின் கவிதைகளும் உள்ளன.

'இது எங்கள் தேசம்' வீடியோப்பட மதிப்பீட்டுரையை 'பதுமலாஞ்சன' னும், 'நிமிர்தல்', 'இலக்குத் தெரிகிறது' கவிதைப் புத்தகங்களின் மதிப்பீட்டுரையை யோ. எழிலியும் எழுதியுள்ளனர். இவற்றுடன் சொக்கன், நா. யோகேந்திரநாதன் ஆகியோரின் கட்டுரைகளும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன.

# கைதிகள் விடுதலை குறித்து அரசின் விளக்கம்

விடுதலைப் புலிகளினால் தடுதது வைக்கப்பட்டுள்ள 39 பொலிஸ் உத்தியோகஸ்தர்களையும் விடுதலை செய்வதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் சிறிலங்கா அரசு சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாக கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் பிரிகேடியர் நளின் அங்கமன தெரிவித்துள்ளார்.

பொலிசாரை சென்றுபார்ப்பதற்கு அவர்களின் நெருங்கிய உறவினர்களில் ஒருவரிற்கு அனுமதியளிக்கும் படியும் வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளதுஎனவும் கூறப்பட்டுள்ளது

இதேவேளை இக் கைதிகள் விவகாரம் கொழும்பில் பல அரசியல் திருப்பங்களை ஏற்படுத்துமென கொழும்புபத்திரிகையொன்று தெரிவித்தது.

## வெளிநாட்டு

ஆகிய பகுதிகளுக்குச் சென்று நிலைமைகளை அவதானிக்கும் மற்றைய குழு கொழும்புக்குச்செல்லும். கொழும்பு செல்லும்குழு விடுதலைபபுலிகளின் காவலில் இருக்கும் பொலிஸாரை விடுதலை செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் முகமாக அரச உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தஉள்ளதாக மேற்படி சமாதானக்குழுவின் உறுப்பினர் ஒருவர் பருத்தித்துறைதுறைமுகத்தில் கப்பலில் ஏறுவதற்குச் சற்று முன்னர் எமது நிருபரிடம்தெரிவித்தார்

கிளிநொச்சியில் இக்குழுவினர் தங்கியிருக்கும் காலத்தில் கிளாலிக் கடலினூடாக பயணம் செய்யும் மக்கள் படும் துன்பங்கள்குறித்து நேரடியாக அறிந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க (நி

## யுத்தக்

னால் தாம் திட்டமிட்டபடி வரும் 13 ஆம் திகதி சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அம் மகஜரில் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும் கலந்து கொண்டார்.

## வீரச்சாவு

நேற்று முன்தினம் வீரச்சாவு அடைந்தார்.

லெப். மிதுலன் (வேண்மா) (தம்பிராசா சுரேந்திரன் வர்ணமேடு, தம்பலகாமம் திருக்கோணமலை] எனும் போராளியே வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## கொழும்பில்

வழங்குவதாக ஒத்துக் கொண்டுள்ளனர் என அச்செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

எதிர்காலத்தில் கைது செய்யப்படுபவர்களுக்கே இவ்வாறு சான்றிதழ் வழங்கப்படும் என பாதுகாப்பு படையினர் உறுதி அளித்துள்ளனர்.

## மட்டக்களப்பு

யிலான விடுதலைப் புலிகள் இருப்பதாகவும் இவர்களைத் தேடுவதற்காகவே இப் பாரிய முப்படைகளும் இணைந்த படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவித்த கூட்டுப்படைத் தலைமையகம் கடந்த 12மணி நேரம் வரை நடைபெற்ற மோதல்களில் 2 இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் அறிவித்துள்ளது.

இதேவேளை இத்தாக்குதல் பற்றி கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன தெரிவிக்கையில், தொப்பிகல காட்டுப் பகுதியில் இருந்து புலிகள் இப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளதாகவும் அதனாலேயே அங்கு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதாகவும் தெரிவித்ததுடன் தொப்பிகல காட்டுப்பகுதியில் கடந்த ஒரு மாத காலமாக மேற்கொள்ளப்பட்ட ''சுமண'' என்ற இராணுவ நடவடிக்கை சில நாட்களுக்கு முன்னரே முடிவடைந்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

## பயிலுனர்

ளாக நியமிக்கப்பட்டு பின்னர் பட்டதாரி ஆசிரியர்களாக தமது பதவிகளை மாற்றியோர் விபரங்களும், இவ்வாறு நியமனம் செய்யப்பட்ட பின்னர் தமது பதவிகளை விட்டு விலகிச்சென்றவர்கள் விபரமும் உண்மையில் தற்போது கடமை செய்யும் பயிலுனர் ஆசிரியர்கள் தொகையும் உள்ளடக்கப்படவேண்டும் எனவும் கல்விச்சேவை ஆணைக்குழு கேட்டுள்ளது. (17)


வண்ணார்பண்ணை காட்டுத்துறை

அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோயில்

மஹோற்சவ கால

## தெய்வீகப் பேருரைகள்

பொருள் - கந்தபுராணம்.

நிகழ்த்துபவர்:- செஞ்சொற் சீராளன் திரு. த. சிவகுமாரன் [ஆசிரியர், யாழ் இந்துக்கல்லூரி. அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம்]

காலம் - 11-06-1993 - 20-06-1993 வரை

தினமும் மாலை 7.30 - 8.30 வரை

| நாளும் | | பொருளும் |
|---|---|---|
| 11 -06- 93 | — | சிவத்துக்காகத்தவம். |
| 12- 06- 93 | — | ஐயன் அவதரித்தான். |
| 13- 06- 93 | — | தகப்பன்-சுவாமி. |
| 14- 06- 93 | — | அண்டங்களை ஆண்ட அவுணர்கோன். |
| 15- 06- 93 | — | வீரவாகுதேவர் தூது. |
| 16- 06- 93 | — | மந்திராலோசனை. |
| 17- 06- 93 | — | முதல் சந்திப்பு. |
| 18- 06- 93 | — | உதயமும் அஸ்தமனமும். |
| 19- 06- 93 | — | மனம் இணங்கியது மானம் பிணங்கியது. |
| 20- 06- 93 | — | வள்ளி கல்யாணம். |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தேவஸ்தானத்தினர்,
காட்டுத்துறை
பிள்ளையார் கோயில்.

(சி-6815)



## நன்றி தெரிவிப்பு

பருத்தித்துறை முனை வெளிச்சவீட்டுப்பகுதி திருத்த வேலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு வேலைத்திட்டம் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. வெளிச்சவீட்டு புனரமைப்பிற்கான வேலைகளில் போரூட் தலைமைக் காரியாலயம் தம்பசெட்டியின் முழு ஆதரவுடனும் ஆயிரம் மனித வலு (கூலி) விற்கான உலர் உணவுகளை வழங்கியதுடன் அவர்களின் நேரடி கண்காணிப்பின் கீழ் ஒத்துழைப்பும் வழங்கியது. இத்திட்டத்திற்கு ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்கிய மற்றும் கடல் புலிகள் அரசியல் நிர்வாகம் பருத்தித்துறை, நகரசபைத் தொழிலாளர்கள், பருத்தித்துறை, கடற்றொழிலாளர்கள் முனைவாழ் மக்கள், பருத்தித்துறை பிரதேச செயலர், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் ஒன்றியம் அனைவருக்கும் முனை போரூட் நிறுவனம் நன்றியைத் தெரிவிப்பதோடு என்றும் நன்றி உள்ளவர்களாகவும் இருக்கும். தொடர்ந்தும் இப்பகுதியில் நடைபெற விருக்கும் பாரிய வேலைத்திட்டங்களுக்கும் இதே போன்று தங்களின் ஒத்துழைப்பையும், ஆதரவையும் நல்க வேண்டும் எனவும் இந்நிறுவனம் வேண்டி நிற்கின்றது.

நிர்வாகம்,
போரூட் நிறுவனம்
முனை, பருத்தித்துறை.

(5125)



யாழ்நகர்

ஸ்ரீதர் திரையரங்கில்

முல்லை மாவட்டக் கலைஞர்களின்

இரண்டாவது வெற்றிப் படைப்பு

## "இது எங்கள் தேசம்"

தினசரி மாலை 4 மணி, 6 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30 மாலை 4 மணி, 6 மணி

[சி-6736]


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 10-06-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9786

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-1182, 28-8589, 27-4301, 26-3068, 24-5721
26-5576, 40-2573, 26-7663, 26-1253, 27-8125
26-3321, 26-1989, 24-9676, 41-9211, 26-9140

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-4874, 42-3514, 24-3897, 24-4957, 27-9649
28-0523, 40-1079, 26-2317, 26-2510, 42-3267

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.